செந்தமிழ் 1925-26

ஸம்புடம் 17 ஸஞ்சிகை 1

ஜ

R65ாா2 11, NIIVD

N26.17.1.

18765

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

அக்ஷய ௵,

1925—1926.

ஸம்புடம் 17.

பத்ராதிபர்:



ஐப்பசி ௴.

OCTOBER.

ஸஞ்சிகை 1

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
M
1927

விஷய ஸூசிகை.


1. நமது ஆர்யமதத்தின் மஹிமை:—ஸ்ரீ. உப. ஸ்ரீ. …ஸ்தேவாசார்ய… 3

2. ஸ்ரீ கீதா பாஷ்யத்தில் ஒருவிசாரம்:— ,, 11

3. ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸ்வமதம்:— ஸ்ரீ. உப. வ. ஸுந்தரராஜாசார்யர். 15

4. கண்ணன் கழலிணைப்பதிகம்:— ஸ்ரீ சடகோப தாஸர். 20

5. ஸுக்ரீவ ஸக்யம்:— ஸ்ரீ. உ. வி. ஆர். ந[illegible]ம்மாசார்யர். 26


6. விசேஷ ஸமாசாரங்கள். 80

7. பத்ராதிபரின் குறிப்புகள். 37


K. R. Press, Madras.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

பாதி விலை! **ஒரு மாதம் வரை** பாதி விலை!!



அசல் விலை ரூ 14.
பாதி விலை ரூ. 7.


22-காரட். ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும், இக்கெடியாரங்களில் எம்மாதிரிஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப்படும்.

☞ ஸ்வான் ஹவுஸ், தபால்பெட்டி, நெ. 508,
பி. டி. மதராஸ்.

**இனாம்!** **இனாம்!!**

இச்சமயம் தவராதீர்கள்!!



சிலநாளைக்கு மாத்திரம்!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ளைக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. 5-0-0 உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியான மணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக்கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265 மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 MAY 1927
MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபாப்ரகாசநம்.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர். வங்கீபுரம், ஸ்ரீ. வாஸுதேவாசாரியர்.

ஸம்புடம் 17.] அக்ஷயஹு, ஐப்பசிமீ [ஸஞ்சிகை 1.

த்ரிபுவனகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா॥

[ஸ்ரீபாகவதம் 1-9-28.

## ஒரு விஜ்ஞாபநம்.

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒரு கார்யதர்சியாகவும் தீபிகையின் பத்ராதிபராகவும் இருந்த ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், சில காரணங்களால் தமக்கு அவ்வதிகாரங்களை வஹிப்பது அஸௌகர்யமாக இருக்கின்றதென்றும், தாம் சென்ற மாஸம் முதல் அந்த அதிகாரங்களை த்யஜித்துவிட்டதாகவும், சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்துகொண்டிருப்பதை தீபிகாபிமாநிகள் எல்லாரும் பார்த்திருக்கலாம். அவர் ஸபையின் அபிவ்ருத்தியையும் தீபிகையின் அபிவ்ருத்தியையும் குறித்துச்செய்து வந்த முயற்சிகளுக்காக, ஸபையார் அவர் விஷயத்தில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்யவேண்டியது அவசியம். அவர் அந்த அதிகாரங்களிலிருந்து நீங்கினதைப்பற்றி நாம் சோகிக்கிறோம்.

எவ்வித ஸபைகளிலும் நிர்வாஹக ஸப்யர்களுக்குள் ஸபையை நடத்தவேண்டிய விஷயங்களைப்பற்றி அபிப்ராயபேதம் வருவது ஸஹஜம். அப்படி வருங்காலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகவேண்டியதே அவசியம். அப்படி ஒத்துப்போவது ஸாத்யமில்லாத பக்ஷத்தில் ஒருவரை ஒருவர் அவமதிப்புறச்சொல்வது யுக்தமன்று. அடியேன் மூன்று வருஷங்களுக்குமுன் கார்யதர்சியாக நியமிக்கப்பட்டகாலம் முதல் நாளது தேதி வரையில் பெயருக்கு மாத்திரம் கார்யதர்சியாக இருந்து வந்தேன். ஸபை ஸம்பந்தங்களான கார்ய

ங்கள் எல்லாவற்றையும் ஸ்ரீ. உ. ஸ்ரீநிவாஸராகவாசார்யரே நடத்திவந்தார். அடியேனுக்கும் அந்த ஸ்வாமிக்கும் யாதொரு விஷயத்திலும் விவாதம் வந்த தில்லை. ஆனால், மற்றும் சில நிர்வாஹ ஸப்யர்களுக்கும் அந்த ஸ்வாமிக்கும் சிலசெலவு விஷயங்களில் ஸப்யர்களின் முன் அநுமதியில்லாமல் செலவிட்டதைப்பற்றியும் இரண்டொரு அங்கத்தினரை ஸப்யர்களின் அநுமதியில்லாமல் நீக்கிவிட்டதைப்பற்றியும் விவாதம் நேர்ந்தது உண்டு. அது விஷயமாய் தவறுதல் நேரிட்டதற்காக நிர்வாஹக ஸபையில் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. அப்படி பிந்ந அபிப்ராயங்கள் நேர்ந்தாற்கூட, அப்படிப்பட்ட அங்கத்தினர்களுடன் வேலை பார்ப்பது ஸ்ரீவைஷ்ணவத்வ லக்ஷணத்திற்கு தகாதது என்றும் அது தகாதகார்யமென்றும் எழுதுவது யுக்தமாகத்தோன்றவில்லை. பத்திரிகைக்கு விஷயப்ரதாநம் செய்வதில் வித்வான்கள் விஷயமாய் இன்னார்தான் கூடும் இன்னார் கூடாது என்று வ்யத்யாஸ அபிப்ராயம் வந்ததாகத் தெரியவில்லை. தீபிகையைப்பற்றியும் ஸபையைப்பற்றியும் முன் மாஸத்தில் குறிக்கப்பட்டிருந்த குறிப்பைக் கொண்டு பயப்படக்காரணமில்லாமல் ஸ்ரீ பகவான் அவைகளை எவ்வித குறைவுமின்றிக்கு நடத்திவைப்பார் என்று நம்புகிறோம்.

நிர்வாஹக ஸபையின் ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீ. உப. வே. எஸ். வாஸுதேவாசார்யர் (மாம்பலம்) பத்ராதிபராய் இருக்க ஒத்துக்கொண்டிருக்கிறார். அது விஷயமாக ஸபையார் அவரிடம் க்ருதஜ்ஞதையைக் உடையவராய் இருக்கிறார்கள்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்,

26—10—26. காார்யதர்சி,

---

ஸ்ரீ:

கர்மபந்தம் விடவேண்டுமானால் பகவானையே கால்கட்டி அந்தப்பந்தத்தை அவிழ்த்துக்கொள்ளவேணுமேதவிர வேறு உபாயமில்லை.

"ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப்போகிறதில்லை; ஸர்வ சக்தி கர்மாநுகுணமாகப்பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி யவிழ்த்துக்கொள்ளுமித்தனை காண்" என்று பிள்ளை திருநறையூரறையர் வார்த்தை.

"மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥"

[பகவத்கீதை.]

186765

ஸ்ரீ: 4

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:,

# நமது ஆர்யமதத்தின் மஹிமை.

[வங்கிபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.]

அதிகம்பீரமான நமது மதத்தின் கொள்கைகளைப்பற்றியும் அநுஷ்டானங்களைப்பற்றியும் புகழ்ந்துபேசி அதனால் அவைகளின் ஏற்றத்தை ஜனங்களின் மனதில் உறுதிப்படுத்தவேண்டிய காலங்களெல்லாம் சென்று விட்டன. இந்த லோகத்தில் வழங்கிவரும் பெரிய மதங்களுள் இதுவும் ஒரு பெரிய மதம் என்பது அநேகமாக எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அல்பகால ஸ்தாயிகளாகவும் துக்கங்களுடன் கலந்து நிற்பனவுமான சிற்றின்பங்களை அதிக்ரமித்து ஆத்யந்தமற்று கேவலம் ஆநந்த ஸ்வரூபமாயுள்ள ஆத்மாவின் அநுபவத்தில் இயற்கையாக ஜநங்களுக்கு ஜநிக்கும் இச்சையின் பரிபாகமாகவன்றோ லோகத்தில் மதம் என்று ஒன்று ஏற்படுகின்றது? அந்தக் காரணத்தினாலேயே எல்லா மதங்களும், காம க்ரோதம் முதலியவற்றை தூரத்தில் த்யஜிக்கவேண்டுமென்றும், அப்படி அவைகளை த்யஜிப்பதால் அத்விதீயமான ஓர் சித்த ஸமாதானம் ஜநிக்கின்றதென்றும் உத்கோஷிக்கின்றன. அந்தச் சித்தஸமாதானத்தை அடைந்து, ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்து, அதற்குமேல் சரண்யனிடத்தில் ஜநிக்கும் பக்திக்குப் பரவசமாகி அவனிடம் ஸர்வஸ்வ ஸமர்ப்பணம் செய்வதே இவ்வாழ்க்கையின் சிறந்த மஹிமை. நமக்கும் சரண்யனுக்குமுள்ள ஸம்பந்தத்தைக் கசடற அறிந்து அவனுடைய அவிச்சிந்ந கைங்கர்யத்தில் அந்வயிப்பதைவிட வேறு உயர்ந்த பதவியும் உண்டோ? கேவலம் கொள்கைகளாவது கேவலம் க்ரியைகளாவது மதம் ஆகா; அந்தரங்க அநுபவமே மதத்தின் முக்கியமான அம்சம். அந்த அநுபவம் கிடைத்தால் நம்முடைய மநோபாவங்களும் நடவடிக்கைகளும் அந்யாத்ருசமான ஒரு மாறுதலை அடைகின்றன. அம்மாதிரியான அநுபவத்தைப்பெற்று அந்த ஆநந்தத்தில் மூழ்கிக்கொண்டு, மற்றவர்களால் வ்யக்தமாக அறியப்படாமலே இந்த லோகத்தில் ஸஞ்சரிக்கும் மஹான்களால் அன்றோ இந்த லோகம் தரித்து நிற்கின்றது?

[illegible] ।
[illegible] ॥

இப்படிப்பட்ட மஹத்வத்திற்கு அநுரூபங்களான குணங்கள் நமது மதத்திற்கு ஏராளமாக இருக்கின்றன என்பது சற்று ஸாவதாநமாக ஆலோசித்துப் பார்க்குமெல்லாருக்கும் விளங்கும். நமது மஹர்ஷிகள், தத்வஹித

55 R 65 [illegible] 26.12.

புருஷார்த்தங்கள் ஆக இம்மூன்றையும் தமது தபோபலத்தால் ஸாக்ஷாத்கரித்து, அவைகளை நமது ச்ரேயஸ்ஸுக்காக சாஸ்த்ரமுகமாகவும் அநுஷ்டாநமுகமாகவும் உபதேசித்திருக்கிறார்கள். ஜ்வலிக்கும்தீபங்கள்போல அவை ப்ரகாசித்து நிற்கையிலும் அபாக்யமாகிறப் பெரியதொரு திரஸ்கரிணி அந்த ப்ரகாசத்தை நம்மிடம் ப்ரஸரிக்கவொட்டாமல் தடுக்கின்றது.

முதலில் இதுவிஷயமாக சிலர் ஒரு ஆக்ஷேபம் செய்வதை நாம் பார்க்கிறோம். அதாவது — ஆர்யமதம் ' என்னும் சப்தத்திற்கு வாச்யமான பொருள் ஒன்றுமே இல்லை. ஆர்யர்கள் என்பவர் ஒரு கூட்டத்தாராக இருந்தாலன்றோ அவர்களுடைய மதம் என்று ஒன்றை நாம் வ்யவஹரிக்கக்கூடும்? ஆர்யர்கள் ப்ராசீநகாலத்தில் ஹிமவத்பர்வதத்திற்கு வடக்கில் வஸித்து, பிறகு காலபலத்தால் சிலர் மேற்குநோக்கி ஐரோப்பா கண்டத்திற்கும் மற்றும் சிலர் தெற்குநோக்கி பாரதவர்ஷம் என்னும் இந்திய தேசத்திற்கும் சென்றார்களென்றும், அப்படி சிதில்மாகப் பல விடங்களிற் சிதறிக்கிடக்கும் ஜநங்களுக்கு அஸாதாரணமாக ஆர்யமதம் சொந்தமென்று சொல்வது யுக்திக்குப்பொருந்தாதென்றும், பண்டைய காலத்தில் ஆர்யமதமென்று ஒன்று வழங்கிவந்திருந்தாலும் அது இக்காலத்தில் அநேக காரணங்களால் சைதில்யத்தை அடைந்து அநுஷ்டாநத்திற்கு அநர்ஹமாகிவிட்டதென்றும், இப்பொழுது ஆர்யமதத்தை ஒரு மதமாகப் பேசுமவர்கள் வஸ்து ஸ்திதியை அறியாதவர்களென்றும் இன்னும் இம்மாதிரியான சில குத்ஸித ஆக்ஷேபங்களை பாச்சாத்ய வித்வாங்களுட் சிலர் செய்துவருகிறார்கள். அவர்களை அநுஸரித்து நம்மவரில் சில தேசசரித்ரப்புலவர்களும் அம்மாதிரியே தாம் நினைத்துவருவதுடன் மற்றவர்களுக்கும் போதித்துவருகிறார்கள். நமது புராணங்களுள் ஒன்றிலாவது நாம் வேறு தேசத்திலிருந்து இந்தத் தேசம் வந்தேறினோம் என்று சொல்லப்படவில்லை. வேதங்களிலாவது மநுஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களிலாவது அம்மாதிரி ஒரு ஊஹம்செய்ய ஹேதுக்களும் தென்படவில்லை. ப்ரத்யுத, இந்தத் தேசமே பூர்வகாலத்திய ஆர்யர்களுக்கு வாஸஸ்தாநமாக இருந்ததென்று வ்யக்தமாக நமது க்ரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. குல்லுகபட்டர் என்று சொல்லப்படும் மநுஸ்ம்ருதியின் வ்யாக்யாதா, இந்தத் தேசத்திற்கு ஆர்யாவர்த்தம் என்று பெயர் வழங்குவதற்கு வ்யுத்பத்தி ஒன்று சொல்லியிருக்கிறார். ‘ஆர்யா வர்த்தந்தே தத்ர புந: புநருத்பவந்தீத்யார்யாவர்த்த:’ (ஆர்யர் என்பவர்கள் இந்தத்தேசத்தில் திரும்பத்திரும்ப ஜநிக்கிறபடியால் இதற்கு ஆர்யாவர்த்தம் என்று பெயர்)என்று அவர் எழுதியிருப்பதை நாம் பார்க்கலாம்.மனம்போன போக்கெல்லாம் எவ்விதப்ரமாணமும் இன்றிக்கே ஊஹாபோஹங்களைச் செய்யு



மவர்களின் வாதத்தை நாம் ஆதரிக்கக்காரணமில்லை. ஆர்யஜாதீயர் என்னும் சப்தம் ஸார்த்தகமென்றும், அவர்களால் கொண்டாடப்பட்டுவரும் மதமே ஆர்யமதமென்றும், அம்மதத்திற்கு ஸகலவிதமான மஹிமையும் பூர்ணமாக இருக்கின்றதென்றும் ஸ்தாபிப்பது யுக்தி யுக்தமாகவும் ப்ரமாணமாகவும் இருக்கும்.

இந்த மதம் சில விசேஷார்த்தங்களைப் போதிப்பிக்கிறபடியால் அது நமக்கு அஸாதாரண அபிமாநத்திற்குக் காரணமாகின்றது. ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாய் அநந்தமான சக்தியுடன் ஜகத் வ்யாபாரத்தைச்செய்துகொண்டுவரும் ஸர்வசரண்யன் எல்லாரையும் நிஷ்பக்ஷபாதமாகப் பரிபாலித்துவருகிறான் என்றும், அந்தப் பரிபாலநத்திற்கு உட்பட்டு நிற்கும் சேதநவர்க்கம் முழுவதும் அவனுக்கு தாஸபூதர்களாக இருந்து அந்தத் தாஸ்யத்திலேயே பரம ஆநந்தத்தை அடையக்கூடியவர்களென்றும், பகவதாஜ்ஞையை அநுஷ்டிப்பதான கர்மாநுஷ்டாநம், பர அவர தத்வங்களின் யதார்த்தஜ்ஞாநம், பாதத்வத்தில் செய்யக்கூடிய பக்தி என்னும் ப்ரீதிவிசேஷம் ஆக இம்மூன்றுமே ஸகல ஜீவன்களுக்கும் ச்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுப்பதில் முக்கிய உபாயங்களென்றும், அந்த உபாயங்களைத்தேடிக்கொள்வதில் நாம் எல்லோரும் சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்டு ப்ரயத்நம் செய்யவேண்டுமென்றும் பலமுகமாக நாம் உபதேசிக்கப்படுகிறோம். துக்க மிச்ரிதங்களாயுள்ள இந்த லோகஅநுபவங்களில் துக்கங்களுடைய ஆக்ரமணத்தால் நாம் நசியாதபடி ஜீவித்து இருக்கவும், ஜீவித்து இருப்பதுமாத்திரமன்றிக்கே பகவத்குணாநுபவத்தாலும் அவனுடைய சேஷ்டிதங்களின் அநுஸந்தாநத்தினாலும் பாகவதர்களின் ஸம்ஸர்க்கத்தினாலும் இந்த ஸம்ஸாரத்தையே எப்படி நாம் அபவர்க்கதுல்யமாக அநுபவிக்கலாமென்றும் தெளியச்சொல்லி, ஸூர்யோதயம் அந்தகாரத்தைப்போலே, இந்த மதம் நமது சோகத்தையெல்லாம் நிவ்ருத்திப்பிக்கின்றது. ஒவ்வொரு சேதநனும் தன்தன் அதிகாரப்படி சிற்சில தர்மங்களை அநுஷ்டிக்கத்தகுந்தவர்களென்று வாத்ஸல்யத்துடன் எல்லாரையும் ஆதரித்து, எல்லாருக்கும் ச்ரேயஸ் ஸாதந மார்க்கத்தை இந்தமதம் காண்பிக்கின்றது. ஸாதுக்களுடைய பரித்ராணத்தை உத்தேசித்தே பகவான் இந்த லோகத்தில் பலவாறாக அவதரிக்கின்றான் என்னும் அவதார ரஹஸ்யத்தால், அவனுடைய அளவற்ற கருணைக்கும் ப்ரஜைகளிடம் அவனுக்கு இருக்கும் ப்ரீதிக்கும் புதியதொரு அத்புதமான அர்த்தத்தை இந்த மதமொன்றே உணர்த்துகின்றது. ஜந்மாந்தர கர்மம் என்று ஒன்று உண்டு என்பதை அங்கீகரித்து, ஜீவன்களுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் பகவானுடைய ஐச்வர்யத்தையும், ஒன்றுக்கும் எவ்வித ஹாநியும் வராமல், ஸமந்வயம் செய்வதும் இம்மதமொன்றே.

இந்த லோகத்தில் தென்படும் வேறு எந்த மதம் மதாந்தரங்களில் இருக்கும் சிற்சில குணபாகங்களை குணமென்று எவ்வித அஸூயையுமின்றிக்கே ச்லாகித்து அங்கீகரிக்கின்றது? எது எது ஒருவித மஹிமையும் பரிசுத்தியும் உள்ளதாக லோகத்தில் தென்படுகின்றதோ, எந்த எந்த அநுஷ்டாநம் ஜகத்தின் ச்ரேயஸ்ஸின் பொருட்டு பரிணமிக்கின்றதோ, அவையெல்லாம் ஸாக்ஷாத் ஸர்வ சரண்யனுடைய தேஜஸ்ஸின் ஒரு அம்சத்தின் ஆவிர்பாவமென்று அறியவேண்டும், அவைகளை அது காரணமாக பஹுமதிக்கவேண்டும் என்று நமது மதமொன்றே உத்கோஷிக்கின்றது. எவ்வளவு ஸுதுராசாரனாக ஒருவன் இருந்தாலும், அவனுக்கும் காலவிசேஷத்தில் நல்லகதி கிடைக்குமென்று நமது மதம் தவிர வேறு எது போதிப்பிக்கின்றது? நமது மதத்தில், ஒருவித ஜந்துவுக்கும் சாச்வதமான நரகபதநமென்பதே இல்லை.

இவ்வளவு மஹிமைபொருந்திய இந்த மதத்திற்கு லோபம் வரும்படியான பல காரணங்கள் பல காலங்களில் ஸம்பவித்திருக்கின்றன. பௌத்தர்கள் முதலிய பலர் இதை நசிப்பிக்க ப்ரயத்நப்பட்டார்கள்; துருஷ்கர் யவநர் முதலியவர்களால் கணக்கற்ற பயஹேதுக்கள் இதற்கு ஜநித்தன. இக்காலத்திலும், ஸங்க்யையில் ஆதிக்யத்தை உடைய சில மதங்கள் இதை உந்மூலநம் செய்ய முயல்கின்றன. ஒன்றுக்கும் நசியாமல், விபத் வந்து நிவ்ருத்தியாகும்பொழுதெல்லாம், அத்புதமான புதிய தேஜஸ்ஸுடனும் பராக்ரமத்துடனும் இது வெளிவருவதை நாம் பார்க்கிறோம். பகவதிச்சை அப்படிக்கு இருந்தால், அதற்கு யாரால் என்ன விரோதம் செய்ய ஸாத்யமாகும்? ஒருவனை நிக்ரஹிக்க வேண்டுமென்று பகவாந் இச்சித்தால் எப்படி அதற்கு விரோதம் செய்ய சதுர்முக ப்ரஹ்மா முதலிய ஒருவரும் சக்தரன்றோ, அப்படியே ஒருவனை அநுக்ரஹிக்க அவன் கோலினால் அதற்கு விரோதம் செய்யவும் ஒருவரும் சக்தராகார்.

பண்டய காலத்திய உபத்ரவங்களின் பரீவாஹம்போல, இப்பொழுது நமது யூதத்துக்குள்ளாகவே சிலரிடமிருந்து சில அல்ப ஹிம்ஸைகள் ஜநிக்கின்றன. வர்ணாச்ரம தர்மம், வைதிக அநுஷ்டாநம் இவைகளைக்கண்டால் சிலருக்கு மஹத்தான அப்ரீதி உண்டாகின்றது. 'மநோபாவமன்றோ பகவான் உகந்தருளும் பதார்த்தம்? ஆந்தரமான ஸத்பாவமொன்று இருந்தால் இந்தத் தர்மாநுஷ்டாநமெல்லாம் அவ்யாவர்த்தகமன்றோ? மேலும், இந்தத் தர்மாநுஷ்டாநங்கள் ஜகத்திற்குப் பலவித தீங்கை விளைவிக்கின்றனவேதவிர, ஆநுகூல்யத்தின்பொருட்டு ஆகவில்லை. இவைகளை ஆத்யந்திகமாக த்யஜித்து மநஸ்ஸை சுத்தமாக வைத்துக்கொள்ளுவதில் மாத்திரம்



ஏன் நாம் ப்ரயத்நப்படக்கூடாது?" என்பது இவர்களுடைய ஆக்ஷேபம். எந்த மஹானுடைய ஆஜ்ஞையைக்கொண்டு இவர்கள் மநஸ்ஸின் சுத்தியை அவச்யம் அபேக்ஷிதமென்று ஒத்துக்கொள்ளுகிறார்களோ, அந்த மஹானே நாம் வேதோக்த தர்மங்களை அநுஷ்டிக்கவேண்டுமென்று ஆஜ்ஞாபித்திருக்கிறார் என்பதை இவர்கள் மறந்தார்போலும்.

'𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 𑌯𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌆𑌜𑍍𑌞𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍀 𑌮𑌮 𑌦𑍍𑌰𑍋𑌹𑍀 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌃 ॥"

என்பது பகவதாஜ்ஞையன்றோ? மநோபாவத்தின் சுத்தியை பகவதாஜ்ஞை என்னும் காரணத்தைக்கொண்டு புரஸ்கரிக்காமல், ஜகத்தின் நன்மைக்கு அது உபகாரகமாகின்றது என்னும் காரணத்தினால் பஹுமாநிப்பதாக அவர்கள் சொன்னால், அந்தக்காரணத்தைக்கொண்டு அது நிலைபெறாதன்றோ? எவ்விதத்திலும் மநஸ்ஸின் சுத்தபாவத்தை அபேக்ஷிப்பவர்கள் தர்மாநுஷ்டாநத்திற்குக் கட்டுப்படும்படியாகவே ஸம்பவிக்கும். நமது சாஸ்த்ரமும், தம் தம் தர்மங்களை ஒழுங்காக அநுஷ்டித்து அதனால் மநஸ்ஸின் தெளிவைப் பெரியோர்கள் அடைந்தார்களென்றும், தர்மாநுஷ்டாநம் இல்லாவிட்டால் மநஸ், காமம் க்ரோதம் முதலியவைகளால் தூஷிதமாகி சுத்தபாவத்தை அடையாதென்றும் முறையிடுகின்றது. உண்மையாகவே அததற்கு உரிய ஸம்ஸ்காரமின்றிக்கு எந்த வஸ்துதான் சுத்தியை அடையக்கூடும்?

வைதிக தர்மமும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநமும் தேசத்திற்குத் தீங்கை விளைவிக்கின்றன என்னும் ஆக்ஷேபத்தைச் சற்று பராமர்சிப்போம். மநுஷ்யர்களுக்குள் ஐகமத்யத்தை ஜநிக்கவொட்டாமல் அவை தடுக்கின்றனவாம். இது உண்மையா? முற்காலங்களில் தர்மாநுஷ்டாநம் பூர்ணமாக நடைபெற்று வந்தபொழுது எப்பொழுதாவது ஜநங்களின் ஐகமத்யத்தை அந்த அநுஷ்டாநம் பாதித்தது என்று எந்த க்ரந்தத்திலாவது சொல்லப்பட்டிருக்கின்றதோ? சரித்ர பரிசீலநம் செய்பவர்களுள் யாராவது அவை இரண்டுக்கும் இம்மாதிரியான பாத்ய பாதக பாவத்தை உணர்ந்தது உண்டோ? உண்மை என்னவென்றால், அவிவேகமும் காமமும் அதர்மமுமே ஐகமத்யநாசத்திற்குக் காரணங்கள். ப்ராஹ்மண அப்ராஹ்மண த்வேஷம், வைதிக தாந்த்ரிகத்வேஷம், சைவ வைஷ்ணவ த்வேஷம், தென்கலை வடகலை த்வேஷம், மடம் முநித்ரயத்வேஷம், இவையெல்லாம் அவிவேகத்தால் ஜநித்தவையல்லவா? ஸர்வத்ர ஸமதர்சித்வத்தையும் ஸர்வ பூதஸௌஹார்த்தத்தையும் காமம் க்ரோதம் முதலிய அசுப

மான மநோபாவங்களின் ஒழித்தலையும் வாக்கினால் மாத்திரம் புகழ்ந்து பேசிக்கொண்டு, அநுஷ்டாநத்தில் அவைகளை அநாதரிப்பது அவிவேக க்ருத்யமன்றோ? 'ஈச்வரன் மஹாகாருணிகன், ஸர்வ ஸமாச்ரயணீயன், எல்லாரையும் நிஷ்பக்ஷபாதமாகக் காப்பாற்றும் சீலமுள்ளவன்' என்று சொல்லிக்கொண்டு அந்தக் குணங்களுக்கெல்லாம் விருத்தமாக நாம் பரஸ்பரம் த்வேஷித்தும் அஸூயித்தும் வர்த்தித்துவந்தால், நாம் ஆச்ரயிக்கும் பகவான் நம்மிடம் எப்படி கிருபை செய்வன்? "யதா ஸ்வாமீ ததா தாஸ:" என்னும் நியமம் இவ்விடத்தில் அந்வயிக்காதா? தவிரவும், வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந ஸம்பந்தமான நிர்பந்தம் இல்லாத இடங்களில் ஐகமத்யம் பொங்கி வருகின்றதா? எவ்வித வரம்புமில்லாமல் காமசரர்களாகவும் காம பக்ஷர்களாவும் இருக்கும் பாச்சாத்யர்கள் பரஸ்பரம் த்வேஷித்து யுத்தம்செய்வதை நாம் பார்க்கவில்லையா? ஆகையால், நமது வைதிக தர்மம் நமக்குள் ஐகமத்யத்தை விரோதிக்கின்றது என்று சொல்வது நிலைபெறாத வாதம்.

அது தேசாபிமாநத்திற்கு ஹாநியை ஜநிப்பிக்கின்றது என்றும் ஐஹிக போகங்களின் அநுபவத்தை வெறுக்கின்றது என்றும் சிலர் சொல்வதை நாம் அறிவோம். இதுவும் நிலைநிற்காத வாதமே. ஸர்வத்ர அபிமாநத்தை வற்புறுத்தும் வைதிகதர்மம் தேசப்ரயுக்தமாகமாத்திரம் த்வேஷத்தையாவது அநாதரத்தையாவது அங்கீகரிக்குமோ? போகங்களின் அநுபவம் முழுவதையும் துறக்கவேணுமென்று நமது தர்மம் அபேக்ஷிக்கவில்லை. சாஸ்த்ரத்தின் மர்யாதைக்கு உட்பட்டு போகங்களை அநுபவித்தல் வேத ஸம்மதமே. எல்லாரும் ஸந்யாஸிகளாகிவிட வேண்டுமென்று நமது சாஸ்த்ரம் சொல்லவில்லையே. க்ருஹஸ்த தர்மத்தை அநுஷ்டிக்குமவர்களுக்கு சாஸ்த்ரீயமான லௌகிக ஸுகாநுபவங்கள் அப்ரதிஷித்தங்களன்றோ? சாஸ்த்ரப்படி பரிக்ரஹிக்கப்பட்ட தமது ஸ்திரீயுடன் குடும்ப வ்யாபாரத்தை நடத்திக்கொண்டு புத்ரமித்ராதிகளுடன் ஸுகங்களை அநுபவிப்பதிலும் சாஸ்த்ரீயமாக அர்த்த ஸம்பாதநம் செய்வதிலும் அப்படி ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யத்தைக்கொண்டு உசிதங்களான போகங்களைத்தேடிக் கொள்வதிலும் நமது சாஸ்த்ரம் எவ்வித பாபத்தையும் சொல்லவில்லை. இம்மாதிரியான ஸுகாநுபவங்களுக்கெல்லாம் இடம்கொடுக்கும் இந்த க்ருஹஸ்தாச்ரமத்தை ஸர்வ போக்யமான ஆச்ரமமென்று பலர் ச்லாகித்துப் பேசி இருக்கிறார்கள். இவ்வளவு மாத்திரமன்று. ஐஹிக போகத்தை அபேக்ஷியாமல் மோக்ஷத்தைத்தேடும் முமுக்ஷுக்கள் விஷயத்திற் கூட, அவரவர்கள் ப்ரக்ருதி வாஸனைக்குத் தக்கபடி சாஸ்த்ரீயமான ஸஜாதீய விஷயங்களில் இந்த்ரியங்களின் ப்ரவ்ருத்தியைச்செய்து, பலாத்கரியாமல்



க்ரமேண இந்த்ரிய நிக்ரஹத்தைத்தேடவேண்டும் என்றன்றோ நமது சாஸ்த்ரம் உபதேசிக்கின்றது? அப்படி இருக்கையில் வைதிக தர்மங்கள் போகாநுபவத்தின் சத்ருக்கள் என்று எப்படி சொல்லக்கூடும்?

'சிலரை அந்த்ய ஜாதீயர் என்றும் சிலரை உயர்ந்த ஜாதீயரென்றும் ஜாதிக்கு பிறப்பே காரணம் குணம் காரணமாகாது என்றும், சிலர் அஸ்ப்ருச்யராகையால் அவர்களுடைய ஸ்பர்சத்தை மற்றவர்கள் வர்ஜிக்கவேண்டுமென்றும் இத்யாதியான வ்யத்யாஸத்தை பாவிக்கும் மதம், எவ்விதத்தில் அத்யந்த ஸாம்யத்தையும் ஸௌஹார்த்தத்தையும் போதிக்கக்கூடும்?' என்று ஒருப்ரச்நம் செய்யலாம். ஜநங்களுக்குள் ஆக்ருதியிலும் வர்ணத்திலும் விபூதியிலும் எப்படி தாரதம்யம் இருக்கின்றதோ அப்படியே ஸ்வபாவத்திலும் குணத்திலும் யோக்யதையிலும் தாரதம்யம் ஸம்பவிக்கக்கூடும் என்பதை நாம் மறக்கக்கூடாது. சிலரைப் பணக்காரரென்றும், மற்றும் சிலரை தரித்ரரென்றும், சிலரை வெள்ளையரென்றும் மற்றும் சிலரை கறுப்புமநிதரென்றும் நாம் வ்யவஹரிப்பதுபோல, சிலரை ப்ராஹ்மண ஜாதீயரென்றும் மற்றும் சிலரை அப்ராஹ்மணரென்றும் வ்யவஹரிப்பது உபபந்நமே. வஸ்து ஸ்திதியை, அது இருப்பதுபோல உணர்வது உண்மையான ஜ்ஞாநமாகுமே தவிர, அதற்கு விருத்தமாக க்ரஹிப்பது உண்மையான ஜ்ஞாநமாகாது. இதைத்தான் நமது மதம் சொல்லுகின்றது. அதில் என்ன தோஷமென்று நமக்கு புலப்படவில்லை. ஆனால், இம்மாதிரியான தாரதம்யங்களைக்கொண்டு, சிலர் மற்றும் சிலரை அவமதிப்பதும், தாம் அஹங்காரத்தை அடைவதும் கொஞ்சமேனும் ந்யாய்யமாகாது. அவ்விதம் அஹங்காரத்தை அடைவது ந்யாய்யமென்றும், சிலர் மற்றவர்களை அவமதித்தும் ஹிம்ஸித்தும் தமது கார்யத்தை ஸாதித்துக்கொள்ளலாமென்றும் நமது மதம் போதித்தால், அப்பொழுது அது பரிக்ரஹத்திற்கு அநர்ஹமே ஆகும். நமது வைதிக தர்மாநுஷ்டாநம் அவ்விதமான நிந்த்ய வ்யாபாரத்திற்கு ஸ்வல்பம் கூட இடம் கொடுக்கவில்லை. அஸூயை, த்வேஷம், அஹங்காரம், ஸ்வார்த்தபரதை முதலிய துர்க்குணங்களை நமது தர்மம் கண்டிப்பதுபோல வேறு எந்தத் தர்மத்தில் நாம் பார்க்கிறோம்? "குணா: பூஜாஸ்தாநம் குணிஷு ந ச லிங்கம் ந ச வய:" (குணங்கள் இருக்கும் மனிதரே பூஜ்யர்கள்; குணம் இருக்கும் இடத்தில் ஜாதி வயஸ் முதலிய தாரதம்யம் அநாதரிக்கப்படவேண்டும்) என்றும், "ந ச வ்ருத்தேஷு வய: ஸமீக்ஷ்யதே" (தர்மாநுஷ்டாநத்திற் சிறந்தவர்கள் விஷயத்தில், வயஸ் முதலிய காரணங்களால் ஏற்படும் தாரதம்யத்தைப்பற்றி ஆலோசிக்கக்கூடாது) என்றும் சொல்வதெல்லாம் எவருக்குத் தெரியாது? நம்முடைய தேஹத்திற்குள்ளாகவே ஏதாவது ஒரு அங்கத்

திற்கு ஒரு அசுத்தி சேர்ந்தால், அந்த அசுத்தி நிவ்ருத்தியாகும் வரையில் நாம் அந்த அங்கத்தை அஸ்ப்ருச்யமாக பாவிக்கவில்லையா? அப்படி அஸ்ப்ருச்ய பாவனை செய்கையிலும் அந்த அங்கத்தினிடத்தில் நமக்கு ஏதாவது அபிமானக்குறைவு ஜநிக்கின்றதோ? துஷ்டமான மநோபாவமே ஐகமத்யத்திற்கு பாதகமாகுமே தவிர, அப்படிப்பட்ட துஷ்ட எண்ணமின்றிக்கே ஸௌஹார்த்தத்திற்கு எவ்வித லோபமும் நேராமல் வஸ்துக்களில் காணப்படும் தாரதம்யத்தை உணர்வது எவ்விதவைமநஸ்யத்தையும் ஜநிப்பிக்காது. த்ருஷ்டம் அத்ருஷ்டம் என்று இரண்டுவிதமான பாவங்களை ஒத்துக் கொள்ளும் நாம், அசுத்தி விஷயத்திலும் அம்மாதிரி இரண்டுவித பேதங்களை அங்கீகரிக்கின்றோம். அத்ருஷ்ட அசுத்திக்கு சாஸ்த்ரமொன்றே ப்ரமாணம். அதற்குக்கட்டுப்பட்டு நாம் சிற்சில நிபந்தநங்களுக்கு உட்பட்டு நடந்தால், அந்தநடவடிக்கை ஒரு தோஷமாகுமோ? எல்லாரும் ஸமரென்றும், எல்லாரிடத்திலும் பகவாந் வஸிக்கிறனென்றும், எல்லாரும் பகவானுடைய சரீரமென்றும், ஏதோ சில கர்மபலமடியாக தேஹப்ரயுக்தமான தாரதம்யங்கள் ஸம்பவித்திருக்கின்றனவென்றும், அந்தக் கர்மபந்தம் விலகும்பொழுது இந்தத் தாரதம்யமும் நசித்துவிடுமென்றும் பலமுறையே கூறும் நமது சாஸ்த்ரத்தை பக்ஷபாதியென்று சொல்வது ந்யாய்யமாகுமா? அஸூயா அஹங்காரம் முதலியவற்றிற்கு உட்படாமல் இருந்தவரையில் இந்த வர்ணாச்ரம தர்மம் ஐகமத்யத்தைக் குலைக்கவில்லை. இப்பொழுது ஐகமத்யத்திற்கு ஹாநி ஸம்பவிக்கும்போலவிருந்தால், மநோபாவங்களை சீர்திருத்த நாம் முயலவேண்டுமேதவிர, தர்மத்தையே த்யஜித்துவிட ப்ரயத்நப் படக்கூடாது. இது ஸம்பந்தமாக ஒரு ஆங்கில பௌம நிருபகர் எழுதியிருக்கும் வார்த்தையை நாம் மநஸ்ஸில் வைத்துக் கொள்ளவேண்டும். "In all things that are purely social we can be as separate as the fingers, yet one as the hand in all things essential to mutual progress" (லௌகிக வ்யாபாரங்களில் நாம் கைவிரல்கள்போல பிரிந்திருந்தாலும், பரஸ்பரம் அபிவ்ருத்தியை ஸம்பாதித்துக்கொள்வதில் நாம் எல்லோரும் கைபோல ஒன்றாகவே இருக்கக்கூடும்).

இப்பொழுது காலபலத்தால் நமக்கு சுத்த பாவம் என்பது தடுமாறிக்கிடக்கின்றது. அநுஷ்டாநங்களும் பல ப்ரகாரங்களில் ஸந்மார்க்கத்திலிருந்து தவறிப்போயிருக்கின்றன. சாஸ்த்ரம் சொல்வதை யதாவத்தாக உணர்கிறவர்களும் யதோக்தமாக அநுஷ்டிக்கிறவர்களும் மிகவும் மிதமாகிவிட்டார்கள். ஸ்வார்த்த பரர்களாக சிலர் புத்திபூர்வகமாகவும் அபுத்திபூர்வகமாகவும் துஷ்டமான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பதை நாம் எவ்விடத்திலும் ப்ராயேண எப்பொழுதும் பார்க்கிறோம். அபார கருணாநிதியாயுள்ள பகவான் எல்லாரையும் கடாக்ஷித்து அநுக்ரஹிக்கவேண்டுமென்பது நம்முடைய ப்ரார்த்தனை. தர்ம ஸம்ஸ்தாபநத்தைச் செய்து லோகத்தை ஸம்ரக்ஷிக்க அவனுடைய கடாக்ஷம் தவிர மற்ற எது சக்தமாகும்?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் ஒரு விசாரம்.

ஸ்ரீபகவத்கீதையில் இரண்டாவது அத்யாயத்தில், ஆத்மா விநாச ஸ்வபாவமுள்ளது அன்று என்று சொல்லும் ப்ரகரணத்தில்,

" ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥"

என்னும் ச்லோகம் காணப்படுகின்றது. இதன் அர்த்தத்தைப் பின்வருமாறு ஸ்ரீபாஷ்யகாரர் விவரித்திருக்கிறார்:—

ஏநம் - கீழ்ச்சொல்லப்பட்ட ஸ்வபாவத்துடன் கூடிய ஆத்மாவைக்குறித்து, (கஞ்சித்) - ஏதாவது ஒரு வஸ்துவை, ஹந்தாரம் - ஹநந ஹேதுவாக (இவ்விடத்தில் ஹநநம் என்பது ஸ்வரூப நாசத்தைக் குறிக்கின்றது; கேவலம் தேஹவியோகமாகிற மரணத்தைக் குறிக்கவில்லை) யோ மந்யதே - எவனொருவன் எண்ணுகிறனோ; யஶ்ச ஏநம் ஹதம் மந்யதே - எவனொருவன் இந்த ஆத்மா என்னும் பொருளை ஏதாவது ஒரு ஹேதுவினால் கொல்லப்பட்டதாக எண்ணுகிறனோ, தாவுபௌ ந விஜாநீத: - அவர்கள் இருவரும் (ஆத்மாவின் ஸ்வபாவத்தை) அறியாதவர்கள். அயம் ந ஹந்தி - (ஆத்மா நித்யமான பொருளாதலால்) அந்த வஸ்து ஆத்மாவைக்குறித்து ஹநநஹேதுவன்று; அயம் ந ஹந்யதே - (ஆத்மா நித்யமானதனால்) ஆத்மா கொல்லப்படுகிறதுமில்லை.

இதன் கருத்தாவது—' ஆத்மா கொல்லப்படத்தகாத பொருள். ஆகையால் மற்ற ஒரு பொருளும் அதைக்கொல்வதில் ஹேதுவாகாது ' என்பதுதான்.

இந்த அர்த்தம் ப்ரகரணத்திற்கு மிகவும் ஸங்கதமானதே. ஆத்மா விநாச ஸ்வபாவமுள்ளது அன்று என்பது ப்ரகரணம். ' விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித் கர்துமர்ஹதி ' (விநாசத்திற்கு அநர்ஹமான இந்த ஆத்மாவின் விநாசத்தைச்செய்ய எந்தப் பதார்த்தமும் யோக்யமாகாது) என்பது கீழ்ச்சொல்லப்பட்ட விஷயம். மேலும், ' நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி ' (இந்த ஆத்மாவை கத்தி முதலிய ஆயுதங்கள் வெட்டமாட்டா)

என்று சொல்லப்படுகின்றது. இவைகளை அநுஸரித்து இந்த ச்லோகத்திலும் 'மற்ற எவ்வித பதார்த்தத்தாலும் ஆத்மா கொல்லப்படத்தகாதது' என்று சொல்வதுதான் ப்ரகரணத்திற்கு ஸங்கதமாகும். அந்த ப்ரகரண ஒளசித்யத்தை உத்தேசித்தே ஸ்ரீபாஷ்யகாரர் இம்மாதிரி பாஷ்யம் அநுக்ரஹித்திருக்கிறார். தவிரவும், 'ஆத்மா நாசம் செய்யப்படத்தகாதது' என்று உபபாதிக்கவேண்டிய இடத்தில், 'மற்றொரு ஆத்மாவினால் அது கொல்லப்படத்தகாதது' என்று சொல்வதைக்காட்டிலும், 'எப்பொருளும் அதை நாசஞ்செய்யாது' என்று சொல்வது அர்த்தபுஷ்டியைக்கொடுக்கும்.

ப்ரகரண ஒளசித்யத்தையும் அர்த்த ஸ்வாரஸ்யத்தையும் அவ்வளவு பலவத்தாக நினைக்காத மற்றை வ்யாக்யாதாக்கள் வேறு விதமாக இந்த ச்லோகத்தை விவரித்திருக்கிறார்கள். அதாவது—

ய ஏநம் ஹந்தாரம் வேத்தி -எவனொருவன் இந்த ஆத்மாவை ஹநநக்ரியைக்குக் கர்த்தாவென்று (அதாவது கொல்லுகிறது என்று) எண்ணுகிறானோ, யஶ்ச ஏநம் ஹதம் மந்யதே - எவனொருவன் இந்த ஆத்மாவை ஹநநக்ரியைக்குக் கர்மாவென்று (அதாவது கொல்லப்படுகின்றது என்று, எண்ணுகிறானோ, தாவுபௌ ந விஜாநீத: - அவ்விருவரும் (ஆத்மாவை) அறியவில்லை, அயம் ந ஹந்தி - (ஏனென்றால்) இந்த ஆத்மா ஹநநக்ரியைக்குக் கர்த்தாவுமாகாது, அயம் நஹந்யதே - இது அந்த க்ரியைக்குக் கர்மாவும் ஆகாது.

இதன் கருத்து என்னவென்றால்— 'ஆத்மா கொல்லப்படத்தகுந்த வஸ்து வன்றானதால், ஆத்ம ஹநநமாகின்ற வ்யாபாரத்திற்கு அது கர்த்தாவுமன்று கர்மாவுமன்று' என்பதுதான். 'அது கர்த்தாவன்று' என்று சொல்வதன் தாத்பர்யம், 'ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் இல்லை' என்பது அன்று; கொலலப்படப்போவதாக ப்ரஸ்தாவிக்கப்படும் பொருள் கொல்லப்படத்தகாதது ஆனதால், அதைக்கொல்வதில் அதற்கு ப்ரவ்ருத்தி இல்லை என்பதே அதன் தாத்பர்யம். ஸாமாந்யமாக ஒரு வஸ்து, மற்றொரு பதார்த்தத்தை நாசம் செய்ய சக்தமாக இருக்கையிலும், நாசத்திற்கே அநர்ஹமாக இருக்கும் வஸ்துவினிடத்தில் அது ப்ரவ்ருத்திக்காதன்றோ? ஆகையால் இந்த அர்த்தமும், 'ஆத்மா அவிநாசி' என்னும் ப்ரகரணத்திற்கு ஸங்கதமே.

ஆனால், ஒரு அம்சத்தில் இந்த இரண்டு பாஷ்யங்களுக்கும் ஒரு பேதம் ஸ்புரிக்கும். ஸ்ரீபாஷ்யகாரருடைய அர்த்தத்தில் 'மற்ற எப்பொருளும் இந்த ஆத்மவஸ்துவைக் கொல்வதில் அசக்தம்' என்பது வ்யக்



தமாக இருக்கையில், மற்றொரு வ்யாக்யாநத்தில் 'மற்றொரு ஆத்மா இந்த ஆத்மவஸ்துவைக் கொல்வதில் அசக்தம்' என்பதுமாத்திரம் சொல்லப்படுகின்றது. அந்தக் காரணத்தினாலேயே, 'ந கஶ்சித் கர்த்துமர்ஹதி' என்னும் ப்ரகரணத்திற்கும் 'நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி' என்னும் ப்ரகரணத்திற்கும், ஸ்ரீபாஷ்யகாரருடைய வ்யாக்யாநமே மிகவும் ஸங்கதமென்று சொல்லக்கூடும்.

தவிரவும், இரண்டாவதாகக் குறிக்கப்பட்டிருக்கும் வ்யாக்யாநத்தில் இன்னும் ஒரு அம்சம் கொஞ்சம் சிந்த்யம். அதாவது— 'ஆத்மா ஹநநமாகிற க்ரியைக்குக் கர்த்தாவன்று' என்று சொல்லும்பொழுது ஆத்மாவுக்கு ஸாமாந்யமாக கர்த்ருத்வம் நிஷேதிக்கப்படுவதுபோலத்தோன்றும். அது சாஸ்த்ர விருத்தம். அப்படிப்பட்ட சாஸ்த்ர விருத்தமான அர்த்தத்திற்கு இடம் கொடுப்பதுபோலிருக்கும் வ்யாக்யாநத்தைவிட வ்யக்தமாக அர்த்தாந்தரத்திற்கு ஆஸ்பதமில்லாமல் இருக்கும் வ்யாக்யாநம் ப்ரசஸ்தமாகுமன்றோ?

இப்படி ப்ரகரண ஒளசித்யம், அர்த்த ஸ்வாரஸ்யம், அர்த்தாந்தரத்திற்கு ஆஸ்பதமாகாமலிருப்பது ஆக இம்மூன்று குணங்கள் இருக்கையிலும், ஸ்ரீபாஷ்யகாரருடைய வ்யாக்யாநம் கொஞ்சம் க்லிஷ்டமாக இருக்கின்றது என்றே அப்யுபகமம் செய்யும்படி நேருகின்றது. முதலில் 'ய ஏநம் வேத்தி ஹந்தாரம்' என்னும் வாக்யத்தில் 'ஏநம்' என்னும் பதத்திற்கும் 'ஹந்தாரம்' என்னும் பதத்திற்கும் ஸாமாநாதிகரண்யம் ஸ்வரஸமாக இருக்கையில் வையதிகரண்யம் கல்பிப்பது கொஞ்சம் க்லிஷ்டமே. அதாவது— பதங்கள் ரசனை நிற்பதைப்பார்த்தால் 'இந்த ஆத்மாவை ஹநநஹேது என்று எவன் எண்ணுகிறானோ' என்னும் அர்த்தமே ஸ்வரஸமாகத்தோன்றும். அடுத்துவரும் 'யஶ்சைநம் மந்யதே ஹதம்' என்னும் வாக்யத்தில் ஸாமாநாதிகரண்யமே எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரே ரீதியாக இரண்டு வாக்யங்கள் பதரசனையை உடைத்தாயிருந்துகொண்டு அடுத்தடுத்து வரும்பொழுது, ஒரு வாக்யத்தில் ஒருவிதமான யோஜனையையும் மற்றொன்றில் வேறுவிதமான யோஜனையையும் செய்வது க்லிஷ்டமன்றோ?

தவிரவும், நான்காவது பாதத்தில் வரும் "நாயம் ஹந்தி ந ஹந்யதே" என்னும் வாக்யத்தின் வ்யாக்யாநத்திலும் க்லேசம் பலவத்தாகக்காணப்படுகின்றது. "அயம் ந ஹந்தி, (அயம்) ந ஹந்யதே" (இது கொல்லவில்லை இது கொல்லப்படுகிறதில்லை) என்பதில் 'அயம்' (இது) என்பது

இரண்டு இடங்களிலும் ஒன்றையே குறிக்கவேண்டும். முதலில் உச்சரிக்கப்பட்ட ‘ஸயம்’ (இது) என்னும் சப்தமே மற்ருேரிடத்திலும் உச்சரிக்கப்பட்டதாக நாம் வைத்துக்கொள்ளுகிருேம். அப்படி இருக்கையில் ஸ்ரீபாஷ்யகாரர், முதல் ‘ஸயம்’ (இது) என்னும் சப்தத்தால் ‘ஹநந ஹேதுவாக நினைக்கப்படும் மற்ெருரு பொருளையும், இரண்டாவது ‘ஸயம்’ (இது) என்னும் சப்தத்தினுல் ஆத்மாவையும் க்ரஹிப்பது ஸ்வரஸமாகத் தோன்றவில்லை.

தவிரவும், கடவல்லீ என்னும் உபநிஷத்தில் காணப்படும்,

‘𑌹𑌨𑍍𑌤𑌾 𑌚𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌹𑌤𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌹𑌤𑌮𑍍 ।
𑌉𑌭𑍌 𑌤𑍌 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑍋 𑌨𑌾𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 ॥’

என்பதற்கு, இவ்விடத்தில் ஸ்ரீகீதையில் காணப்படும் ச்லோகம் உபப்ருஹ்மணமன்ருே ? அந்தக் கடவல்லீ வாக்யத்தில், ஆத்மா ஒன்றுக்கே, ஹநந வ்யாபாரத்தில் ஹேதுவாக இல்லாமல் இருக்கும் தன்மையும் கர்மாவாக இல்லாமல் இருக்கும் தன்மையும் இரண்டும் சொல்லப்படுகின்றன. அவ்விடத்திற் சொல்லப்படும் அகர்த்ருத்வம், ‘ஆத்மா நித்யமானதால் அது கொல்லப்படத்தகாதது’ என்பதில் தாத்பர்யமுள்ளது என்று விவரணம் செய்யப்பட்டிருந்தபோதிலும், ஆத்மா ஒன்றைப்பற்றி மாத்திரம் அவ்விடத்தில் ப்ரஸ்தாவம் செய்யப்படுகின்றது என்பது வ்யக்தம். அப்படி இருக்கையில், ச்ருதியில் இருக்கும் வாக்யத்திற்கு ஒருவிதமான யோஜனையும், அதற்கு உபப்ருஹ்மணமாக ப்ராயேண அந்தப்பதங்களைக்கொண்டே ஏற்பட்டிருக்கும் ஸ்ரீகீதா ச்லோகத்திற்கு மற்ெருருவிதமான யோஜனையும் அவ்வளவாகப் பொருந்துமா ? ஆனுல், ஸ்ரீகீதையில் ‘எப்பொருளுக்கும் ஹநநஹேதுத்வம் இல்லை’ என்று சொல்வதற்குள், உபநிஷத்திற்சொல்லப்படும் ‘ஆத்மாவுக்கு ஹநநஹேதுத்வம் இல்லை’ என்னும் அர்த்தம் அடங்கி இருக்கிறபடியால், இரண்டும் ஒரே அர்த்தத்தை உடையவை என்றும் பரஸ்பரம் விரோதம் இல்லையென்றும் ஸமாதாநம் சொல்லலாம். அர்த்த விரோதம் இல்லாமற்போனுலும் யோஜனைகளின் விரோதம் இருக்கின்றது என்பதை அபலபிக்க முடியாது.

இவ்வளவு க்லேசம் இருக்கின்றது என்பதை ஸ்ரீபாஷ்யகாரர் உணர்ந்து, ப்ரகரண ஔசித்யமும் அர்த்த புஷ்டியும் கிடைக்கின்றன என்பதை உத்தேசித்தே இம்மாதிரி பாஷ்யம் அநுக்ரஹித்திருக்கிருர் என்பது ஸ்பஷ்டம். உண்மையாகவே ப்ரகரண ஔசித்யமும் அர்த்த புஷ்டியும் கிடைக்கும் இடத்தில் யோஜனைகளில் நேரும் ஸ்வல்ப க்லேசங்கள் அநாதரணீயங்களே.

ஸ்ரீ:

# ஸ்ரீபாஷ்யகாரரின் நியமனம்.

[ஸ்ரீ. உ. வங்கீபுரம் - ஸுந்தரராஜாசார்யர்.]

𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾 𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌮𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌮𑍍 (ஸ்ரீபாஷ்யக்காரருடைய திவ்ய ஆஜ்ஞையானது வ்ருத்தியை அடையட்டும், மேலும் மேலும் அபிவ்ருத்தியை அடையட்டும்) என்கிற ச்லோகமானது எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களாலும் ப்ரதிதினமும் தங்கள் தங்கள் திருமாளிகைகளிலும் ஸேதுமுதல் ஹிமவத்பர்வதம் முடிய உள்ள ஸகலமான ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களிலும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்றது. இப்படி எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களினுலும் கொண்டாடப்பட்ட ஸ்ரீபாஷ்யக்காரருடைய ஆஜ்ஞை என்னவென்பது அதின் பெருமை எப்படிப்பட்டதென்பதும் அவசியம் தெரியவேண்டிய விஷயங்கள்.

ஸ்ரீபாஷ்யக்காரர் திருநாட்டிற்கு எழுந்தருளுவதற்கு முன் திருமேனியில் நோவு சாத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அவருடைய வியோகத்திலுண்டான வருத்தத்தைக்கண்ட ஸ்ரீபாஷ்யக்காரர், தன்னுடைய சிஷ்யவர்க்கங்களாய் எல்லாரையும் ஸமீபத்தில் வரும்படி நியமித்து தனக்கு பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் திருவடி நிலைகளை த்யானம் செய்துகொண்டு, தன்னுடன்கூட யாராவது தேஹவியோகம் செய்தார்களாகில் அவர்களுக்கும் தனக்கும் யாதொரு ஸம்பந்தமும் அற்றுப்போகுமென்றும் அவர்கள் அப்படிச்செய்வது சாஸ்த்ர மரியாதைக்கு மிகவும் தப்பு என்றும் ஸாதித்தருளினுர். ஏனென்ருல் ஸ்ரீயப்பதியாகிய எம்பெருமான் திருவடிகளையே உபாயமாகவும் உபேயமாகவும் பற்றியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்தினருக்கு ஆத்மயாத்ரை பகவததீனம். இந்த ஆத்ம யாத்ரையில் தங்கள் தங்களுக்கு கர்த்வ்யாம்சங்கள் உண்டென்று இருந்தார்களாகில் “தன்னைத் தானே ரக்ஷித்துக்கொள்ள சக்தியற்றவர்கள் என்ற எண்ணத்துடன் பகவானை ரக்ஷகனுக வரித்தது” பொய்யாகப்போகவேண்டிவரும். மேலும் அப்படிச்செய்ய ப்ரவர்த்திப்பவனுக்கு பகவானுடைய ப்ரஸாதம் ஏற்படமாட்டாது. அப்படி ப்ரஸாதம் ஏற்படாமல் போவதும் தவிர பகவானுடைய நிக்ரஹமும் கட்டாயம் ஏற்படும். “தேஹயாத்ரை கர்மாநுகுணமாக வருகிறதாகையினுல் அதனுல் வருத்தப்படக்கூடாதென்றும் அப்படி தேஹயாத்ரைக்காக ஒருவன் துக்கப்பட்டானுகில் பகவத் ப்ரபாவம் தெரியாத நாஸ்திகர்களுக்கும் இவர்களுக்கும் வாசியில்லாமல் போகவேண்டியதாகவரும்”. ஆகையால் ஆத்மயாத்ரையிலும் தேஹயாத்ரையிலும் கொஞ்

சங்கூட அந்வயம் வைத்துக்கொள்ளக்கூடாதென்பது ஸ்வாமியின் திருவுள்ளம். அப்படி இரண்டிலும் அந்வயமில்லாமல் மனம் போனபடி கார்யங்களை நடத்தலாமோவென்னில் அதுவும் கூடாது. அப்படி செய்தானாகில் தான் கற்ற வித்யைக்கு பலனில்லாமல் போகவேண்டிவரும். 'ஶ்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' (ச்ருதி ஸ்ம்ருதி இவை இரண்டும் என்னுடைய ஆஜ்ஞை) என்கிறபடி ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லியபடி கைங்கர்யம் செய்தால் பகவத் ப்ரீதியுண்டாகும். இதை உத்தேசித்துத்தான் ஸ்வாமி தேசிகனும் " இது (கைங்கர்யம்) யதாசாஸ்த்ரம் பண்ணினால் உகப்பாம் " என்று அருளிச்செய்தார். எப்படி ஒருவன் தன்னுடைய பராக்ரமத்தை அயலாருக்கு ஹிம்ஸை செய்வதில் உபயோகப்படுத்துவது பிசகாகுமோ அதேமாதிரி சாஸ்த்ரவிரோதமான பகவத் கைங்கர்யமும் அபசாரகோடியிலேயே சேறும். ஸ்ரீஆளவந்தாரும் தான் அருளிச்செய்த ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தில் 'அஶாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்னம்' (சாஸ்த்ரங்களில் விதிக்கப்படாதவைகளெல்லாம் அஸுர ஸ்வபாவமுள்ளவர்களுக்கு தகுந்தவைகள் என்று அருளிச்செய்துள்ளார். இதிலிருந்து தேவ ப்ரக்ருதிகளான பகவானுக்குச் செய்யவேண்டியவைகளெல்லாம் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டவைகளாகவே இருக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. இப்படிப்பொதுவாக ஸாதித்துவிட்டு பின்னீடு வ்யக்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் செய்யக்கூடிய கைங்கர்யங்கள் ஐந்து என்று ஸாதித்தருளினர். அவையாவன:—

(1) ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்தித்தல். வேதவிரோதமான மதங்கள் ஒருபுரம் நிற்க, வேதத்தை ஒப்புக்கொண்டவர்களாகிய சங்கர, பாஸ்கரர் யாதவ ப்ருப்ருதிகளாலே வ்யாமோஹமடைந்திருந்த ஜனங்களுக்கு எப்படி ச்ரமப்பட்டாவது காஷ்மீரதேசம் சென்று அங்கேயுள்ள ஸரஸ்வதிபீடத்திலிருந்த வ்ருத்தி க்ரந்தத்தை ஸம்பாதித்து பகவான் போதாயனரால் அருளிச்செய்யப்பட்ட வ்ருத்தி க்ரந்தத்தை அடிபோற்றி ஸ்ரீ பாஷ்யத்தை ஜகத்திலுள்ளவர்கள் உஜ்ஜீவிக்கவேண்டியதற்காக ஸாதித்தருளினர். தான் விரோதி நிரஸநத்திற்காக பட்ட பாட்டையும் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களையும் யோஜித்து ஒரு குடியானவனுக்கு விரை முதல் எப்படி அவசியமோ அப்படியே ஸம்ப்ரதாய ப்ரவசனத்திற்கு ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவிப்பது முக்யம் என்பதாக ஸாதித்தருளினர். இது மிகவும் உத்தமமான அதிகாரியால் செய்யக்கூடிய கார்யம். இப்படிச் செய்வதற்குத்தகுந்த ஜ்ஞான சக்தியில்லாதவர்கள் இரண்டாவதான நியமனத்தை நடத்தவேண்டும். அதாவது:—



(2) அருளிச்செயல்களைக்கேட்டு ப்ரவர்த்திப்பித்தல். ஸ்ரீபாஷ்யத்தை இன்னார்கள் தாம் ஸேவிக்கலாமென்றும் இன்னார்கள் ஸேவிக்கக்கூடாதென்றும் நிபந்தனைகள் உண்டு. ஆனால் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு அம்மாதிரியான நிபந்தனை கிடையாது. விசேஷமான சாஸ்த்ர ஜ்ஞானமும் பரிச்ரமும் வேண்டாம். இது எல்லாருக்கும் எளிதில் தெரியக்கூடிய பாஷையாகிய தமிழ்பாஷையிலிருப்பதால் இந்தக் கைங்கர்யம் ஸர்வ ஜனங்களுக்கும் ஹிதகரமாகவே இருக்குமென்று ஸ்வாமி திருவுள்ளம் போலும். இதற்கும் சக்தியில்லாவிட்டால் மூன்றாவது கைங்கர்யத்தில் ப்ரவர்த்திப்பது. அதாவது:—

(3) உகந்தருளின திவ்யதேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு திருமாலைகளை உண்டாக்குதல். அதாவது பராங்குச பரகால ப்ரப்ருதிகளான பன்னிரண்டு ஆழ்வார்களாலேயும் லோகஹிதமாக 108 திவ்யதேசங்கள் மங்களாசாஸனம் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர சில ஸ்வயம் வ்யக்தமான புராணஸ்தலங்களும் இருக்கின்றன அவைகளில் கோயில்கொண்டிருக்கும் எம்பெருமான்களின் நித்ய நைமித்திக கைங்கர்யங்கள் மிகவும் மேன்மையுடனும் ச்ரத்தையுடனும் நடக்கவேண்டியதற்காக இப்படிப்பட்ட நியமனங்கள் ஸ்வாமியால் ஏற்படுத்தப்பட்டன.

'ஸாக்ஷாந் மந்மத மந்மத:' (பகவான் மன்மதனைக் காட்டிலும் அதிகமான ஸௌந்தர்யத்துடன் கூடினவனாகையினால் அவனுக்கு மன்மத மன்மதன் என்று பெயர்) என்றும், 'ரஸோ வை ஸ:' (ஸகலவிதமான ரஸங்களுக்கும் இருப்புஸ்தானம்) என்றும் சாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கும்படியான பகவானுக்கு நாம் உபசாரம் செய்து ஆகவேண்டியது ஒன்றுமில்லாமலிருந்தாலும், இவைகளெல்லாம் ஆச்ரிதனுடைய பக்திக்கு போக்கு வீடாக ஸாதித்தவைகளே தவிர பகவானுடைய ஸ்வயம் ப்ரயோஜனத்திற்காக இல்லை என்பது திண்ணம். இதை உத்தேசித்து ஸ்வாமி தேசிகனும் "கைங்கர்ய பரனுக்கு பரமைகாந்திகள் உகந்த இடமே உசித ஸ்தானம்." என்று அருளிக் செய்தார். இந்தக் கைங்கர்யம் தேஹத்தில் சக்தியுள்ளவர்கள் தாம் செய்யக்கூடும். அசக்தர்கள் இம்மாதிரி கைங்கர்யங்களில் அன்வயிக்க முடியாது. அவர்கள் சக்திக்குத் தகுந்தபடி நான்காவது கைங்கர்யத்தை நியமித்தருளினர். அதாவது:—

(4) த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநம் பண்ணுதல். அதாவது,—

'சாஸ்த்ரஜ்ஞானம் பஹுக்லேசம் புத்தேச்சலனகாரணம் |
உபதேசாத்தரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு ||'

சாஸ்த்ரங்களைத் தகுந்தபடி வாசித்து அவைகளின் தத்வங்களை யதாவத்தாக அறிவது மிகவும் கஷ்டமான கார்யம். (சாஸ்த்ரங்கள் பஹுவாயும் வக்தாக்களான மஹரிஷிகள் பஹுபேர்களாயுமிருப்பதினால்) புத்தியைச் சலிப்பதற்குக்கூட அவைகள் காரணங்களாகின்றன. (ஆகையினால்) ஆசார்யனிடமிருந்து ஹரியை யதாவத்தாக அறிந்துகொண்டு மற்ற கர்மங்களினின்றும் (புத்திமான்) நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும்) என்கிறபடி தன் தன் ஆசார்யர்களிடமிருந்து இம் மந்த்ரத்தின் அர்த்தத்தை க்ரஹித்துங்கொண்டு அதை த்யாநம் செய்யவேண்டும். சரணாகதிகத்யத்தில் ஸ்ரீ பாஷ்யக்காரர் 'அர்த்தாநுஸந்தாந ஸஹிதஸ் ஸதைவம் வக்தா' (த்வய மந்த்ரத்தை அர்த்தாநுஸந்தானத்துடன் எப்பொழுதும் சொல்லக் கடவன்) என்று ஸாதித்தருளினார்.

'தஸ்ய வசீகரணம் தச்சரணாகதிரேவ' (பகவானை வசப்படுத்துவது அவன் திருவடிகளில் ஆச்ரயிப்பது) என்று பகவானிடத்தில் ஆச்ரயிக்கவேண்டியதின் ஆவச்யகத்தை ஸாதித்து அதற்கு வழியைப் பாரமர்சிக்கும் அவஸரத்தில், 'உபாயப்ரார்த்தனா மதி:' (சரணாகதியாவது த்வயத்தின் அர்த்தம்) என்றும் ஸாதித்தார்கள். மேலும் இந்த த்வயத்தின் பெருமையைக் கொண்டாடாத ஆசார்யர்களும் உள்ளார்களோ? உபநிஷத்துக்கள் 'ஸக்ருதுச்சாரிதஸ் ஸம்ஸார தாரகோ பவதி' (ஒருதரம் உச்சரிக்கப்பட்டதாய்க்கொண்டு ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு ஸாதனமாகிறது) என்று உத்கோஷிக்கின்றன. இவைகளைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு அல்லவோ ஸ்வாமி தேசிகன் த்வயாதிகாரத்தில் "ஆஸ்திகனுக்கு இம்மந்த்ரத்தினுடைய (த்வயத்தினுடைய) ஸமுதாய ஞான பூர்வக ஸக்ருதுச்சாரணமே உத்தாரகமென்னுமிடம் சாஸ்த்ரஸித்தம்." என்று ஸாதித்தருளினார். ஸ்ரீ பாஷ்யக்காரரும் இம்மந்த்ரத்தின் ப்ரபாவத்தை தான், அருளிச்செய்த கத்யத்தில் 'யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம்' (எப்படியாவது நீ த்வயத்தைச் சொன்னாய்) என்று வெளியிட்டருளினார். இப்படி த்வயத்தை அர்த்தத்துடன் அநுஸந்தானம் செய்ய சக்தியற்றவர்களுக்கு ஐந்தாவது கைங்கர்யம் நியமித்து அருளினார். அதாவது:—

(5) முன் சொன்னவைகளுக்கு யோக்யதை இல்லையாகில் என்னுடையவனென்று அபிமாநிப்பானொரு ஸ்ரீ வைஷ்ணவனுடைய அபிமானத்தில்



ஒதுங்கி வர்த்தித்தல். இப்படிச் செய்யும்பொழுது பகவத்பக்தியுள்ள உத்தம ஸ்ரீ வைஷ்ணவர்களின் அபிமானத்திற்குப் பாத்ர பூதர்களாகவேண்டும். அப்படிச் செய்வதினால் எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும். எப்படி ஒரு ப்ரபுவின் ப்ரீதியை எதிர்பார்த்து நிற்பவன் அந்த ப்ரபுவின் அபிமதங்களைத் தான் வெறுக்கமாட்டானோ அதே மாதிரியாக பகவத்பக்தர்களை ஒருவன் வெறுத்தால் பகவான் திருவுள்ளம் சீறும். இதைத் திருவுள்ளத்தில்வைத்துக்கொண்டு ஸ்வாமிதேசிகனும் "அநுகூலரைக் கண்டால் சந்தந குஸுமாதிகள்போலவும், நிலவு தென்னல்போலவும் அபிமதவிஷயங்கள்போலவும் உகந்து வர்த்திப்பான்" என்று ஸாதித்தருளினார்.

இப்படி ஸ்ரீ பாஷ்யக்காரராலே ஜகத்தின் உஜ்ஜீவனத்திற்காக பரம க்ருபையுடன் ஸாதிக்கப்பட்ட கைங்கர்யங்களில் ஏதாவது ஒன்றை அவரவர்கள் அதிகாரத்திற்குத்தக்கபடி செய்து தங்கள் ஜன்மத்தை ஸபலமாக்குவார்களாக.

---

ஸ்ரீ:

வைஷ்ணவன் என்று யாரைச்சொல்லலாம்? த்வாதச ஊர்த்வபுண்ட்ரம் முதலிய பாஹ்ய சிஹ்னங்கள் மாத்திரம் பூண்டவன் வைஷ்ணவன் ஆவானோ? ஆந்தரமான மனோபாவத்திற்கு அவை பரீவாஹங்களாக மாத்திரம் ஆகுமேதவிர ஸ்ரீமந்நாராயணனிடத்தில் அஸாதாரணமான பக்தி விசேஷமொன்றே வைஷ்ணவத்வத்திற்கு ப்ரதானமானஹேது. 'ஸௌஹார்த்தம் ஸர்வபூதானாம்' என்று சொல்லப்படும் ஸ்வாமிக்கு தாஸனாக இருக்கும் வைஷ்ணவன் ஸ்வாமியின் சீலத்தை அநுஸரிக்காமல் வேறு விதமாக நடக்கவும் ஸாத்யமாகுமோ? இந்த அர்த்தத்தை பங்க்யந்தரேண நமது பெரியோர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அர்த்த ஸ்வாரஸ்யத்துடன் சப்த ஸ்வாரஸ்யமும் அதில் இருப்பதால் ஸஹ்ருதயர்கள் எல்லாரும் அந்த ஸ்வாரஸ்யத்தை அநுபவிக்க வேண்டுமென்றோ?

"ஒருவனுக்கு வைஷ்ணத்வமுண்டு, இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காணென்று சீயர் பலகாலும் அருளிச்செய்வர்: பிறரனர்த்தங்கண்டால் ஐயோ! என்றிருந்தானாகில் 'நமக்கு பகவத் ஸம்பந்தமுண்டு' என்றிருக்க அடுக்கும்; இத்தனையும், பட்டிவோனுக்கென்றிருந்தானாகில் 'நமக்கு பகவத் ஸம்பந்தமில்லை' என்றிருக்க அடுக்கும்."

ஸ்ரீ:

# கண்ணன் கழலிணைப் பதிகம்.

[சடகோப தாஸன்.]

சில பெரிய தமிழ்வித்வான்கள் மதுரகவியாழ்வாரைக்கிட்டி 'எங்கள் கம்பனோடு தர்க்கித்துச் சங்கப்பலகை யேறினாலொழிய வேதந்தமிழ் செய்த பெருமாள் என விருதுபிடிக்கமாட்டோம்' என்று நம்மாழ்வார் உத்ஸவத்தைத்தடுத்ததாயும், மதுரகவிகளும் 'கண்ணன் கழலிணை'யை ஒரு சிறு முறியிலெழுதி மதுரைச் சங்கப்பலகையில் வைத்ததாயும், அப்பலகையில் கம்பனோடு ஏறியிருந்த மூன்னூறு தமிழ்ப்புலவரையும் சேர்த்துக்கவிழ்த்துவிட்டு அச்சிறு முறியொன்றையே அது தரித்துநின்றதாயும் ஆழ்வார் விஷயமான குருபரம்பரைக்கதைகளிற் காண்கிறோம். இவ்விருத்தாந்தத்தினால் நிச்சயமாகத்தெரிகிறதாவது:—இத்திருவாய்மொழியின் சொற்சுவையும் பொருளடக்கமும் ஆழ்வாருக்கே யுறியனவென்பதும் ஸர்வோத்க்ருஷ்டங்களென்பதுமே. இங்கு பொருளின்மிகை யென்னென்பதைமட்டும் விசாரிப்போம். அது ஸாமாந்யமான கவிப்பொருளாகுகவெனினும் மறைப்பொருளின் (வேதார்த்தத்தின்) மிகுதியை விளக்குவதே இங்கு உசிதம்.

இப்பதிகம் நம்மாழ்வார் திருவாய்மொழி 10-வது பத்தின் ஐந்தாவதாகும். பிறவியிலேயே இறையவன் கடாக்ஷத்தால் மயர்வறமதிநலமருளப்பெற்ற இவ்வாழ்வார் பரமபுருஷனை யுள்ளபடியே தம் திருவுள்ளத்திலேயே யனுபவித்து அதனாலுண்டான கரைபுரண்ட ப்ரீதியாலே அவனைத் தாமனுபவித்தபடியே பேசி நாட்டாரையுமவன்திறத்திற்சேர்த்து எல்லையிலந்நலத்தைப்பற்றற்றுப்புல்கிக் கடைத்தேறும்படி செய்யத்திருவுள்ளம்பற்றித் திருவாய்மொழி பாடத்தொடங்கினாரன்றோ! அதில் முற்படத் 'தெளியாத மறைநிலங்களி'ன் (எளிதில் அறியமுடியாத வேதபாகங்களில்) இன்றியமையாத அம்சங்களின் அர்த்தங்களைத்தமது அனுபவத்தாலறிந்து தெளியக்காட்டியதே இவ'ருள்கொண்டாயிரமின் தமிழ்பாடி யவ்வருமறையின் பொருளை யருளிய'தென்னலாம். திருவாய்மொழியில் முற்பட, அடியவரடைந்து உய்யும் துறையான ஸர்வேச்வரனுடைய கல்யாணகுணங்களையே அவன் ஸ்வரூபமாகக்காட்டி, அவனே உயிருள்ளவும் இல்லாதவையுமான, நுண்ணியவையும் பெரியவையுமான, நினைந்த எல்லாப்பொருள்களையும் ஆக்கியும் உட்புகுந்து தாங்கி நியமித்தும் பலபடியும் காத்தும் ப்ரளயத்தில் தன் உள்ளொடுக்கி வைத்தும் ஸ்வதாளனடந்து கர்மங்கழிந்தவற்கு மோக்ஷங்கொடுத்தும் இன்புறுமிவ்விளையாட்டு நடத்துபவனாதலால் இப்படி யனைத்துக்கும் காரணனை 'அந்நலமுடைய வொருவனாய்' நின்ற காரணனை நணுகுவதேகருமமென்று தீர்மானித்தார். அதற்கு மற்றெதிலும் பற்றைவிட்டு எவரிடத்தும் பக்ஷபாதமாகிற பற்றிலனாய் முற்றவும் ஸமனாய் நின்ற அவனுடைய குணபூர்த்தியிலீடுபட்டு அவனையே யெல்லாமாகப்பற்றும் இடைவிடாத அன்புமிகும் பக்தியோகமே உபாயம் எனக் காட்டினார். அதற்கும் தூய்மையான நன்னீரும் புகைபுவுமென்னலாம்படியான எளிதில் கிடைக்கும் பொருளன்றி மற்றொன்றும் வேண்டாமென்றுபதேசித்தருளினார். இவற்றுக்கெல்லாம் பிரமாணம் ஞானச்சுடர் மிகுந்ததிடபிரமாணமான வேதமே யென்றும் அதைக்குயுக்திகளாலசைக்க வொண்ணாதென்பதையும் முதலிலேயே விளக்கியருளினார்.



வேதத்துக்கு இவ்விளக்கம் பெருமையாலன்றோ வைதிகரிலும் சிலர் '[illegible]'என்று ஸ்ரீபராசரபட்டரருளிச்செய்தபடியே, ஈச்வரனொருவனுளனென்றறிந்தும் அவன் பாண்டங்களைமண்ணைக்கொண்டு உண்டாக்கும் குயவனைப்போல்தனக்குப்புறம்பான பிரகிருதியின் உதவியினால் உலகத்தையாக்கும் வெறும் புருடனென்றார்கள். மற்றும் சிலர், அதற்கு நூறுமடங்கு அதற்கு நூறு மடங்கு என்றவாறு அளவையிட்டுப் பார்த்தும் முடிவில் அதனளவு வாக்குக்கும் மனதுக்கும் எட்டாது என்று உபநிஷத்தே களைத்து நிற்கும்படியான எல்லையில்லாத ஆநந்தம், ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ், கருணை, அன்பு, ஸௌசீல்யம் (எளியவரோடும் ஸமமாய்ப் போகுதல்), ஔதார்யம் முதலிய கணக்கற்ற கல்யாணகுணங்களையுடையவனென்று வேதக்கடல் ஓங்கி முழங்கச் செய்தேயும் ஈச்வரனைக் குணமொன்றுமில்லாத இருப்பொன்றுமே (ஸந்மாத்ரம்) அதாவது ஒரு காரியத்துக்குமுதவாத ஒரு வஸ்துவென்றனர். வேறு சிலர், ஈச்வரனைக் குணங்களுடையவனென்று எண்ணியும் அவன்தான் '[illegible]' என்றபடி 'ஓங்கி உலகளந்த உத்தமனாய்' 'அண்டமுற நிமிர்ந்த நீள் முடியனாய்' 'அனைத்துலகுமுடைய வரவிந்த லோசனாய், இறையவர்களுக்கு மிறையவனாயிருப்பவனென்று உபநிஷத்துக்கள் சுட்டிக்காட்டி சாஸ்திரங்களும் 'வாரணம் தொலைத்த காரணன்' என்று விளக்கினாலும், அவனைவிட்டு அவனிடத்தே தம் முயிருய்வுக்காகப் பிச்சைபுக்க பிறவிக்கடலிலடங்கிய சிவபெருமானே பெருமானென்று, பிரமித்தார்கள். இப்படிகளிலொருமித்து அன்னார் வேதப்பொருளை யழிக்கப் பார்த்துப் பின்னர் சேராச்சேர்த்தியால் தமக்குள்ளேயே கலகங்களைச் செய்துகொண்டு முடிவில் ஒருவர்க்கொருவர் புடையுண்டு கிடப்பதுமான பரிதாப நிலைகளில் நின்றனர்!

இவர் நிற்க, திருவாய்மொழியைத் தொடர்வோம். இப்படி யுலகத்தார் தெளிந்து ஆத்மரக்ஷணம் செய்துகொள்வதற்கு ஸமஸ்தகல்யாண குணாகரனை ஸர்வேச்வரனிடத்தில் பக்தியும் அவனொழிந்தவற்றில் வைராக்யமும் அன்றி வேறு விரகில்லை யென்று உபதேசித்த ஆழ்வார், 'அது அவனை யனுபவித்தாலல்லது கிடையாதே! அவன் நீசர்களாகிய நமக்குக் கிட்ட உரியனோ? நாமவனை யிழந்தேபோனோ', மென்று நாட்டார் கரைந்து நைவுண்ணுமவிருக்கும்படி, 'எம்பெருமான் தன்னைக் காண வாசைப்படும் பத்தர்களுக்குக் காணலாம்படி எளியனும்; பிரதிகூலர்களுக்கன்றோ அவன் அரியனாவது' என்று தேற்றினார். அவ்வாறே எம்பெருமான் தன்னை யடுத்த இடைச்சியரும் தம்மைக் கயிற்றால் உரலோடு சேர்த்துக் கட்ட அதற்கிசைந்திருந்த எளிவுதுடக்கமான ஸௌலப்யாதி குணங்களிலீடுபட்டு அவனை நேரிற் கண்டாற்போல் ஞானத்தாற் கண்டு வழிபட்டுகந்து பின்னர் வெளிப்படையாக அவனை அனுபவிக்கவேண்டுமென்னும் ஆவல் மிகுந்து, தன்மை யழிந்து, ஆற்றாமை மிகுந்து, ஆரம்பித்த ஹிதோபதேசத்தை முடிக்க மறந்து பிராட்டி பேச்சு தாய்பேச்சு தோழி பேச்சு என்னும் பிரகாரங்களில் அந்யாபதேசம், தூதுவிடுதல், மடலூருதல், தன் பேச்சான ஸ்வாபதேசம் என்றவாறு பல படிகளில் பரமனைப் பேணும் துறைகளிலிழிந்து கரைந்தும் தேறியும் மாறி மாறிப் பெற்ற அனுபவங்களைத் திருவாய்மொழியிற் பெரும்பாலும் பேசியருளினார். இடையிடையே உபதேசங்களும் காணப்படுகின்றவாயினும், அவையும் இவ்வனுபவங்களின் பரிமாற்றங்களேயாயின.

இவ்விதங்களில் திருவாய்மொழி ஒன்பது பத்துக்களும் மேல் மூன்று பதிகங்களும் நடக்கின்றன. நான்காவதாகிய 'சார்வேதவநெறிக்கு' என்னும் பதிகத்தில், திருவாய்மொழி ஆரம்பத்தில் துவக்கின ஹிதோபதேசத்தைத் தலைக்கட்டத் திருவுள்ளம்பற்றி, ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்காக க்ருஷ்ணனாய் அவதரித்து ஆய்ச்சியரோடு ஸமானமாகப் பரிமாறி அவர்களால் கட்டுண்டு அக்கட்டே தமக்குப் பெயராகத் தாமோதரனென்னும்படி கிடந்த வாத்ஸல்யாதிசயத்தை (அன்புப் பெருக்கை) காட்டியதென்ன; இப்படிக் 'கண்ணிக்குறுங் கயிற்றால் கட்டுண்டவன்' தேவர்களுக்கும் 'எண்ணற்கரிய'னாயிருந்தும் பரா பரனன்றோ வென்பதென்ன; 'ஆள்கின்றான் ஆழியான்' என்றபடியே அடுத்தவர் இடர் தீர்த்துப் பயமெல்லா மொழிக்க வல்ல சக்ராயுதத்தை எப்போதும் தரிப்பதென்ன; பிரளயாபத்தில் ஸகல ஜீவாசிகளையும் உதரத்திலொடுக்கிக் காத்து ஒன்றுமறியாத பாலகனைப்போல ஆலிலையிற் றுயின்ற மஹா குணமென்ன; அப்படியே திருப்பாற் கடலில் திருவநந்தாழ்வான்மேல் பள்ளிகொண்டிருந்த இருப்பென்ன; அந்தரங்கத்தில் பக்தி



யுடன் தியானிப்பவர்களுக்கு எப்பொழுதும் எதிரில் நிற்கும் கருணையென்ன; இத்தனை அடியரானார்க்கிரங்கும் பித்தன், பிரும்மாதிகளுக்கும் நித்யஸூரிகளுக்குமுள்பட அப்பாலனான ஸர்வேச்வரனாயிருப்பதென்ன; கடுவினையர்களும் கூசாது அணுகும்படி செய்விக்கும் தாயாகிய மஹா லக்ஷ்மியோடு தினைப்பொழுதும் பிறிவின்றியிருக்கும் பாக்கியமென்ன; இத்தகைய அளவற்ற நற்குணங்களுக்கு இருப்பிடமான பெருமானின் ஸ்வபாவத்தைக் கணிசித்தால் அவன் ஞானத்தில் மிகுந்தவருக்கும் அடையவரியனானாலும் தன்னிடத்தில பக்திபண்ணினவர்கள் எளிதாய் கிட்டும்படியாகிறான் என்பது நன்றாய்த் தெரியவரும், என்று விளக்கிக் காட்டினார்.

இதனடுத்தது **கண்ணன் கழலிணைப்** பதிகம். இதில் கீழ்ச்சொன்ன பக்தியை நடத்தும் பிரகாரங்கள் ஒருவாறு விவரிக்கப்படுகின்றன. பகவான் திறத்திற்செய்யும் பக்தியை தியானரூபமான **பக்தியோக** மென்றும் அவன் திருவடிகளைவன் சரணாகப்பற்றி அடைக்கலம் புகுவதாகிய **பிரபத்தி** யென்றும் இருவகை யாயன்றோ சாஸ்திரங்கள் வகுப்பது! இவற்றிலிழியும் இருவகைப்பட்ட முமுக்ஷுக்களையும் குறித்துத் திருவாய்மொழி யுபதேசங்களெல்லாம் நடப்பது. இவ்விருவரும் பகவானிடத்தில் பக்தி பண்ணும் பிரகாரங்கள் இந்தத்திருவாய்மொழியின் விஷயம். வேதாந்தங்களனைத்தும் பரம உதாரனாய் ஸர்வசேஷியாயிருக்கும் நாராயணன் திருவடிகளில் அவனுகந்த நித்யகைங்கர்யங்களை ஒழிவில் காலமெல்லாம் செய்யப்பெறுவதே பரமபுருஷார்த்த மென்றும் அதைப்பெறுவதற்கு அவனருளல்லது வேறு புகலில்லை யென்றும் உத்கோஷியாநின்றன. ஆழ்வாரும் இவ்வுண்மையையே, போதித்தாரன்றோ! ஆனால் அவனருளைப்பெற நமக்குச் சாத்தியமாய் நாம் செய்யவேண்டிய உபாயங்களைக் காட்டினாலன்றி சாஸ்திரம் பிரயோஜனப்படாது. ஆனதுபற்றி இது வேதப்பொருளின் ஸாரமான அம்சமாயிற்று. இதை இந்தப் பதிகம் யாவரும் அறியும்படி இனிதூட்டுவதால், இதன் மஹிமை முற்கூறிய சங்கப் புலவரிடையில் வெளியாயிற்றென்னலாம்.

'கண்ணன் கழலிணையிற் காதலுறுவார் செயலைத்
திண்ணமுற வொருங்கச் செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதே சிக்கை தலைக்கட்டினான்மாறன்'

என்று திருவாய்மொழிநூற்றந்தாதியில் ஸ்ரீ மணவாள மாமுனிகள் இவ்வர்த்தத்தை பிரதிபாதித்தருளினார். ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனும் திரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில்,

‘ விவியஹாத [illegible] [illegible] ஸ்ரீமந் நாராயணமே [illegible]
[illegible] ’

(சேதனர்களின் தீர்க்கபந்துவான ஸ்ரீமந்நாராயணனே இத்திருவாய்மொழிப்பாசுரங்களிற் காட்டியபலபடிகளில் பூஜிக்கவமையுமென்று திராவிடவேதமுழுவதும் கண்டுரைத்த ஆழ்வார் மொழிந்தார்) என்றருளிச்செய்தார். ‘ [illegible] ’ என்று இங்கு விசேஷித்துச்சொன்னதினால் வேதப்பொருளனைத்தையுமாராயுமிடத்து இந்த பகவத் பஜநப்ரகாரங்கள்தான் சேதனர்கள் உஜ்ஜீவனார்த்தமாக அறிந்து அவலம்பிக்கவேண்டிய முக்கிய அர்த்தங்கள் என்று திருவுள்ளம் விசதமாயிற்று.

அவைதாம் நாராயண திருநாம ஸங்கீர்த்தனம், திருமந்திர ஜபம், அவனுடைய பரர்களுக்கும் பரனாயிருக்கும் தன்மையை தியானித்தல், இடைவிடாமல் ஸ்மரித்தல், அவன் திருவடிகளில் புஷ்பாஞ்சலி ஸமர்ப்பித்தல், திருநாமங்களை இடைவிடாது ஓதுதல், அவற்றைப் பிறர்க்குரைத்தல், ஸ்தோத்திரம் பாடுதல், பக்தி பரவசராய் ஆடுதல், பிரதக்ஷிணம் செய்தல், நமஸ்கரித்தல், மற்றுமவரவர்க்குரிய வர்ணாச்ரம தர்மங்களைக்களவற அநுஷ்டித்தல், என்றவாறு பஹுப்ரகாரங்களாயும் ஸுலபமாயுமிருப்பவையென்று இப்பாசுரங்களாற்சொல்லப்பட்டன. இங்கு பாசுரங்களின் அர்த்தங்களைச் சுருங்க அநுஸந்திப்பது உசிதமானதால், அவ்வழியே செல்வோம்.

**கண்ணன் கழலினை, எண்ணும் மனமுடையீர்**
**எண்ணும் திருநாமம், திண்ண நாரணமே.**

ஆச்ரித ஸுலபனான எம்பெருமான் திருவடிகளைப் பெறவேண்டுமென்றிருப்பார் திருமந்திரத்தையே சொல்லக்கடவர்கள். அதனால் அவனை நிச்சயமாகப்பெறலாமென்று பாட்டுக்குப்பொருள்.

இதில் கண்ணன் என்பதால் அபராதக்களஞ்சியமாய் கிடக்கும் நாம் காணவாசைப்படும் ஸர்வேச்வரன், ஆச்ரிதர்க்குக் காலிமேய்த்தல் தூது போதல் தேரோட்டுதல் பர்யந்தமான ஏவல்தொழிலையும் செய்யப்பின் வாங்காத பரம ஸௌலப்யத்தையும் உதாரகுணத்தையும் உடையவன் என்றதாயிற்று. மனமுடையீர் என்றதினால் இவ்வர்த்தம் திடப்பட்டது; ‘ தயவு செய்து நண்ணுங்கள் ’ என்னுமாப்போல் பகவானே முன்னம் பாரித்துக் கூவும் குணாதிசயம் வெளியாகிறது. நாரண சப்தத்தால் இத்தகைய எளியவன் தான் ஸர்வாத்மாக்களுக்கும் புகலிடமாய் ஸர்வாத்மாக்களிலும் உள்ளிருந்து நியமிப்பவனான ஒத்தாருமிக்காருமில்லாத ஸர்வரக்ஷகனெனப்பட்டது. மேலும், ‘ நாமஞ்சொல்லில் நமோநாரணமே ’ என்றபடியே இந்நாமமே மற்ற பகவந்நாமங்களைக்காட்டிலும் மேற்பட்டதென்பதும் ஏகாரத்தால் ஸூசிப்பிக்கப்பட்டது.



‘ [illegible] ’

(வேதாந்தங்களும் அதன் விரிவுகளான பாரதாதி உபப்ரும்ஹணங்களின் பொருள்களும் எல்லாம் ஒன்றும் குறையாமல் எந்த மந்திரத்தினுள்ளடங்கியிருக்கின்றனவோ) என்று இதன் பிரபாவத்தை ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். இம்மந்திரத்தின் விசேஷார்த்தங்களை ஆசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ரஹஸ்ய க்ரந்தங்களில் ஸேவித்து ஆநந்திக்க ப்ராப்தம். இங்கு கவனிக்கவேண்டியது என்னவென்றால், இம்மந்திரத்தின் அர்த்தத்தை மனதில் வாங்கினால் அதில் பகவத் ஸ்வரூபத்தையும் ஜீவஸ்வரூபத்தையும், இவ்விருவருக்குமுள்ள சேஷிசேஷ ஸம்பந்தத்தையும் தெளிவித்து, அவ்வழியால் பரமபுருஷார்த்தம் இன்னதென்று காட்டி, அதை யடைவதற்கிடையூறுகளானவைகளைப்போக்கும் உபாயத்தை நாடி ஸ்ரீமந்நாராயணனைப்பெறும் ஆவலைமிகுத்து அதன்பொருட்டு யோக்யதையை வெகு சீக்கிரத்தில் உண்டாக்கிவிடுமென்பதே.

(இன்னும் வரும்)

---

ஸ்ரீ:

ஈச்வரன் யதாகர்ம பலப்ரதனாயிருக்கக் கர்மங்களும் அபரிமிதகால போக்யங்களாயிருக்க இத்தனை காலமுண்டாகாத மோக்ஷோபாயமும் அதற்கு ஹேதுவான ஆசார்யப்ராப்தியும் எவனுக்கு எப்பொழுது எந்தவழியாக உண்டாகும் என்பது ஒருவராலும் அறியமுடியாது. இதனை ஸூசிப்பிக்கும் ஒரு உபாக்யானம் உண்டு.

ஜானச்ருதி என்று ஒரு ராஜா ஒரு காலத்தில் இருந்தார். அவர் பஹுவந்நப்ரதனுமாய் பஹுவித்த ப்ரதனுமாயிருக்க, பல்ல பல்லாக்ஷர் என்னும் இரண்டு ருஷிகள் அவரிடத்தில் அநுக்ரஹத்தாலே, ‘ சுஷ்க தர்மங்கொண்டு கார்யமில்லை; ப்ரஹ்மஜ்ஞானமுண்டாக வேணும் ’ என்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அந்த ராஜாவின்மேலே பறந்துகொண்டு போகிறவிடத்திலே, பல்லர் பல்லாக்ஷரைப்பார்த்து ‘ ஜாநச்ருதி மேலே நிழல்படாதபடி பேணிக்கொண்டுபோம் ’ என்று சொன்னார். அதற்கு பல்லாக்ஷர், ‘ நிழல்பட்டால் வந்ததேது? ரைக்வராகப்புகுகிறானோ?’ என்று சொல்லி அநாதரம் பண்ணிக்கொண்டுபோனார். அதைக்கேட்டு ஜாநச்ருதி துக்கிதராய், ரைக்வரைத்தேடி, சிரங்குஞ் சொறிந்துகொண்டு கார்ப்பண்யத்தோடே ப்ரச்சந்ந பாவராயிருக்கிற அவரைக்கண்டு அநுவர்த்தித்து ‘ ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க வேணும் ’ என்று ப்ரார்த்தித்தார். ‘ சுச்ரூஷா ஹீநனுக்குச் சொல்லப்போகாது ’ என்று அவர் பதில்சொல்ல, ‘ ப்ரஜாரக்ஷண தத்பரனான எனக்கு சுச்ரூஷைக்கு அவகாசங்காணேன் ’ என்ன, ஆதர பரீக்ஷார்த்தமாக, ‘ ஆனால் பஹுத்ரவ்யங்கொண்டு வா ’ என்றார். அப்படியே ஸர்வஸ்வத்தையும் அவர்கொண்டுவந்து ஸமர்ப்பிக்க அந்த ராஜாவினுடைய ஆதரங்கண்டு ரைக்வர் அவருக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார்.



18765

ஸ்ரீ:

# ஸுக்ரீவஸக்கியம்.

[ஸ்ரீ. உ. வே. வித்யாரத்நாகர பண்டிதவர வி. ஆர். நரஸிம்மாசார்யர்.]

ஸ்ரீமத் வால்மீகிமஹருஷியினால் அருளப்பெற்ற ஸ்ரீமத் ராமாயணமெனும் இதிஹாஸத்தில் ஸந்தர்ப்பவசத்தினால் பிரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றதான ஸர்வலோக சரண்யனான ஸ்ரீராமபிரானுக்கு வாநரராஜனான ஸுக்ரீவன் திறத்தில் ஏற்பட்டுள்ள ஸக்யத்தை ப்ரதிபாதிக்கின்ற உத்தம ப்ரகரணத்தின் அர்த்த தாத்பர்யம் ஸஹ்ருதயர்களின் ஹ்ருதயங்கமமாகச் சுருக்கி எழுதப்படுகிறது.

தாம் நெருங்கிப்பழகுவதற்கு ஈடான தம்மவையோடு ஒத்த குணங்கள் பலவற்றைப்பெற்றிருப்பது பற்றி, தமக்குச் சமானரென்று கருதப்பட்டிருப்பவர் திறத்தில் ஸரளமாய் உதிக்கின்ற பிரீதியே ஸக்யம் அல்லது ஸ்நேஹம் எனப்படுகின்றது. பிரீதி ஒன்றே அது வைக்கப்படும் இடத்தில் தாரதம்மியத்தினால் பக்தி, ஸ்நேஹம், தயை, என்கிற வெவ்வேறு வ்யவஹாரங்களுக்கு இடமாகின்றது. இவற்றுள் தமது மதிப்புக்கு இடமான உயர்குணங்கள் நிறைந்திருப்பது கொண்டு தம்மிலும் உத்க்ருஷ்டரென்று கருதப்பட்டிருப்பவர் திறத்தில் பணிவுடன் ஏற்படுகின்ற பிரீதியே பக்தியெனப்படுகின்றது. துக்கத்திற்குக் காரணமான துர்க்குணம் அல்லது துர்த்தசைகளை அடைந்திருப்பவரிடத்தில் ஐயோ! துன்புற்றனரேயென்று மனமுருகிக் கரைந்தோடிச்சேரும் பிரீதியே தயை எனப்படுகின்றது. ஸக்யமென்பதை முதலிலேயே சொல்லிவிட்டோம். எனவே பக்தி, ஸ்நேஹம், தயை, இவைகள் முறையே உயர்ந்தோர் ஸமானர் தாழ்ந்தோர் இவர்களிடமேதான் உண்டாகக்கூடியவைகள். என்றால் இங்கு ஸ்ரீராமபிரானுக்கும் வாநராதீசனுக்கும் நேசமே உண்டாகியதாகப் பேசப்படுகின்றதே இதன் கருத்தென்ன? ஸ்ரீராம ஸுக்ரீவர்களிருவரும் தம்மில் ஒருவரை மற்றொருவர் ஸமானரென்றே நினைத்தனரா? அப்படியாகில் அந்நினைவு உண்மையாகுமோ? ஸர்வோத்தமனான ஸ்ரீராமபத்திரனெங்கே! ஸாதாரணனான ஸுக்ரீவனெங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ளதுபோன்றதல்லவோ இவ்விருவர்களுக்குமுள்ள ஏற்றத்தாழ்வு? இருக்க, இவர்களை ஒருவரையொருவர் ஸ்நேஹிதரென்று உரவுகொண்டாடுவதெப்படி என்று இங்கு ஒரு சந்தேகம் கிளம்புகின்றது. இதனைப் பரிஹரிப்பதான



வசன ஸந்தர்ப்பத்தில் மஹருஷி சில மர்மங்களை வெளிப்படுத்தியருளுகின்றார்.

ஸமானர்களுக்கே ஸ்நேஹம் தோன்றுவது ஸஹஜமேயென்றாலும் இங்கு ஸ்ரீராமபத்திரன் தன்னில் மிகமிகத்தாழ்ந்தவனான வாநரனிடத்தில் அளத்தற்கரிய நட்பைப்பூண்டனனென்பது மட்டுமன்றி, அக்கீசனும் ஈசன் காட்டிய நேசத்தை இசைந்து ஏற்றுக்கொண்டானென்றும் இப்பிரகரணத்தில் பிரதிபாதிக்கப்படுகின்றது. எனினும் இங்கேயே இதற்குள்ள நற்காரணங்களும் விளக்கப்பெறாமல் மறக்கப்பட்டனவென்பதற்கில்லை. இத்தெளிவுறுவதற்காக இவ்விடத்திய பூர்வோத்தர ஸந்தர்ப்பத்தைச் சற்றுப் பராமர்சிப்போம்.

இராகவர்களைக்கண்டு பயங்கொண்ட ஸுக்ரீவன் தன்னை வெகுவாய்ப் பத்திரப்படுத்தி, அவ்விருவரின் உண்மையையும் அறிந்துவரும்படி அவர்கள்பால் அநுகூலரான ஸ்ரீமதாஞ்ஜநேயரை அனுப்பிவைத்தான். அப்பேரறிவாளனும் ஆங்கு அவர்களை நெருங்கி அடிவணங்கித் துதித்துக் கொண்டாடிப் பிறகு தார்மிகனான ஸுக்ரீவனென்பானொரு வாநரவீரன் தனது முன்னவனால் தாக்கப்பட்டுத் தவித்துத்திண்டாடித் திரிகின்றானென்றும், அவன் அநுகூலத்தைப்பெற நினைத்து அனுப்பிய அனுமானென்னும் வானரன் தானென்றும் விண்ணப்பித்து, 1. 'ஐயன்மீர்; நுமது நட்பை விரும்புகின்ற இச்சுக்ரீவன் பழையபடி வானரர்க்கெல்லாம் அரசனாய் விளங்கும் பாக்கியத்தை நுமது பெருங்கருணையால் பெற்று மகிழும்போது அவனுக்கு அமைச்சனாயிருந்து ஆதரவளிக்க அவசியமுள்ள அடியேன் அன்னவன் மனத்தின்படி வேற்றுருப்பூண்டு நுமது திருவடிவாரம் வந்தடைந்தே'னென்று சொல்லைமுடித்து நின்றனன். அதுகேட்டு பேருவகைபூத்த முகத்தினனான ஸ்ரீராமபிரான் அவ்வனுமானைப் பலவாராகக் கொண்டாடித்தனது அண்டையில் நின்ற இளையபெருமாளைப்பார்த்து, 'நீர் உமது தம்பியோடு இக்கடுங்கானனம் வந்துசேர்ந்ததின் கருத்தென்ன என்று மேலவன் வினவியதற்குத் தக்கவாறு முழுவிடையையும் கொடுப்பாயாக'வென்று நியமித்து நிற்க, ஸ்ரீராகவன் எண்ணியபடிக்கெல்லாம்

1. ப்ராப்தோஹம் ப்ரேஷிதஸ்தேந ஸுக்ரீவேண மஹாத்மநா ।
ராஜ்ஞா வாநரமுக்யாநாம் ஹநுமாந்நாம வாநர: ॥
யுவாப்யாம் ஸஹ தர்மாத்மா ஸுக்ரீவ: ஸக்யமிச்சதி ।
தஸ்ய மாம் ஸசிவம் வித்தி வாநரம் பவநாத்மஜம் ॥
பிக்ஷுரூபப்ரதிச்சந்நம் ஸுக்ரீவப்ரியகாம்யயா ॥

பதில் பகருவதற்குப் பிரியப்படாதவனான அக்கண்ணிய புருஷன் தனது அண்ணனின் வரலாற்றைத்தெரிவிப்பானாகி 'அனுமானே, இம்மஹான் உத்தமகுணங்கள் யாவற்றும் ஒருங்கே நிறையப்பெற்ற சக்ரவர்த்தியான தயரதனின் மூத்தமைந்தன். இவ்விளவரசவீரன் தனது தந்தையின் சொற்காத்தல்வேண்டி, நெருங்கிவந்த அரசுரிமையை உதறித்தள்ளிவிட்டு அடியேனோடும் அன்னவரின் அகத்தினளான அருமங்கையும் தொடர்ந்துவர இக்கானனத்திற்குடிப்புகுந்தனர். அவர் அடியேனைத் தம்பியென்றே நேசிக்கின்றாராயினும் அக்கல்யாண குணநிதிக்கு அக்ரீத (விலைக்கு வாங்காத) 1. தாஸனே யானடியேன். அடியேனை இதுகொண்டே இலக்குமணனென்று அழைக்கின்றனர்போலும். எக்காலத்திலும் எவ்வகையிலும் இவ்வடிமையின் உள்ளத்தைவிட்டு உவகை ஒருகணமும் நீங்காதாம். இத்தகையில் இவ்வீரன் பாரியை தனித்திருக்கையில் ஓரரக்கன் அவ்வுத்தமியை அபஹரித்துச்சென்றானும். அப்பேயின் வரலாறொன்றும் விரிவாகத்தெரியவில்லை என்றாலும் சாபத்தினால் அரக்கனான தனுவென்பான், தேவனாகுமவன் 'உமது பாரியையை அபஹரித்தவனை ஸுக்ரீவனெனும் வானரவீரன் அறியமாட்டுவானென்று' ஸ்ரீராமன்பால் பகர்ந்துவிட்டு, அப்புண்ணியங்கொண்டே ஸுகமாய் சுவர்க்கஞ்சென்றான். அனுமானே; உண்மையையறிய விரும்பிய உமக்கு உள்ளபடி நடந்திருப்பதைச்சொல்லிவிட்டே'னென்று வார்த்தையை முடித்தார். அதுவரையிற் சொல்லியது பற்றாதென்று நினைத்து இராகவன் தன் மனதிலுள்ளதை 'உள்ளபடிக்கே மேலேயும் சொல்லிவிடெ'ன்று இளையவனை வுற்புறுத்த, அத்தீரனும் தீராதெனக்கண்டு, 'ஏ அனுமானே; அக்காரியத்திற்காக அடியேன் உமது ஸுக்ரீவனைச் சரணமடைகின்றே'னென்று வெகு ஆக்ரோசத்துடன் சொல்லித்தீர்த்து வார்த்தையை முடித்தார்.

இராகவனோ அதுவும் போதாதது போன்றவனாக 'தம்பீ; ஏனிப்படிக் கெம்பீரமாக நடிக்கின்றாய்? உண்மையான மற்றொன்றேயான சொல்லை மட்டும் சொல்லிவிட்டு நின்றுவிடு' என்று நிர்ப்பந்தித்தார். ஐயோ பாவம் இளையவர் என் செய்வார்? அப்பேச்சை நினைக்கும்போதே மனம் பொறாமல் பெருமூச்சு எறிகிறார். அண்ணனுடைய ஆணையோ தவிர்க்கக்கூடியதாயில்லை. ஆத்திரத்தோடு 2. 'அனுமானே; நான் மட்டுமல்ல ஸுக்ரீவனைச் சரணமென்றது இராமனுமேதான்' என்று சொல்லிவிட்டு அதனோடு நின்று

1. அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத: ।
2. அஹம் சைவ ஹி ராமஶ்ச ஸுக்ரீவம் ஶரணம் கதௌ ।



விடாமல், தனது ஜ்யேஷ்டனின் சிரேஷ்டமான ஸ்வரூபத்தையும் அவனது அநகமான திருக்கல்யாண குணங்களின் மேன்மையையும் அறியமாட்டாமல் அனுமான், அவனது நீர்மைக்குத்தக்கதெனினும், அவன் தன் மேன்மைக்குச்சற்றும் பொருத்தமற்றதாகத்தான் மொழிந்த நேர்மையற்றதும் நிர்ப்பந்தத்தால் சொல்லப்பெற்றதுமான சிறப்பற்ற சொற்களைக்கேட்டு இவற்றை உண்மையென்றே மதித்து ஏமார்ந்துவிடவேண்டாமென்று நினைந்து, 'ஏ மாருதியே; தன்னை அடுத்தவருக்கு வேண்டுவனவெல்லாங்கொடுத்து 1. 'முன் பல்லுலகுக்கும் ஒரு தனி நாயகனாய் விளங்கிய இவ்விராமன் ஸுக்ரீவனைச் சரணமடைகின்றானாம்' என்பவைபோன்ற ஸ்ரீராமபிரானுடைய பரத்வத்தை விளக்கக்கூடியனவான சொற்கள் சிலவற்றைச் சங்கையறச்சொல்லிவிட்டு 2. 'அனுமானே; துக்கத்திற்கு வசப்பட்டு அதனால் துன்புறுவோனாகிச் சரணமென்று வந்தடைந்து கிடக்கும் இராமன்றிறத்தில் வானரச்சேனைக்கு அதிபதியான ஸுக்ரீவன் அனுக்கிரஹஞ்செய்வதற்கு அர்ஹனன்றோ?' வென்று வெகு சிற்றத்துடன் வினவிநின்றார்.

அநுமானோவெனில் இச்சொற்களைக் கேட்டதுமட்டுமன்றி இவைகளைச் சொல்லுகையில் 3. இளையபெருமாள் தனது நாதனின் நிகரற்ற உயர்வை உதாஹரிக்கும்போது அவருக்கு உண்டாகிய பூரிப்பையும் அத்தகைய அளப்பதற்கரிதான மேன்மையுற்ற அவனே, தாழ்ந்தோரையும் தன்னோடொத்தவராக அல்லது தனக்கும் மேலானவராகக் கருதி நெருங்குவதற்கு ஈடான நீர்மையை நினைந்து உறுகுவதையும், இந்நீர்மையின் நிலையறியாத பாமரர் எவரேனும் தாழ்ந்தவரென்றெண்ணி அவரைத் திரஸ்கரிக்க நேருமோவென்று அச்சமுறுவதையும், அதுநேருமானால் அப்போது நிகரற்ற தனது வீரியத்தின் ஒரு சிறு அம்சத்தையேனும் அப்பாமரரின் துர்ப்புத்தியைக் களைவதற்காகச் சிலவுசெய்கிறதென்கிற நிர்ணயத்தையும், அவ்வுத்தம பக்தனான இலக்ஷ்மணனது அப்போதைய நிலைமையில் கண்கூடாகவும் கண்டுகொண்டார். அப்போது ஆஞ்ஜநேயர் பலவிதமாய் ஆலோசிக்கலாயினர்.

(இன்னும் வரும்.)

1. லோகநாதம் புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி ।
2. ஶோகாபிபூதே ராமே து ஶோகார்தே ஶரணம் கதே ।
கர்துமர்ஹதி ஸுக்ரீவ: ப்ரஸாதம் ஹரியூதப: ॥
3. ஏவம் ப்ருவாணம் ஸௌமித்ரிம் கருணம் ஸாஶ்ருபாதநம் ।
ஹநூமாந் ப்ரத்யுவாசேதம் வாக்யம் வாக்யவிஶாரத: ॥

ஸ்ரீ:

# விசேஷ ஸமாசாரங்கள்.

## (I)

### ஸமஸ்கிருத வித்யையின் பெருமை.

மைசூரிலிருக்கும் மஹா ராஜாவின் ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் ஐம்பதாவது அப்தபூர்த்தி மஹோத்ஸவம் சில தினங்களுக்குமுன் நடைபெற்றது. அதில் மேன்மை தங்கிய மைசூர் மஹா ராஜா அவர்களே அக்ராஸநம் வஹித்து ஒரு அருமையான பிரசங்கம் செய்ததில் பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி அவர் பேசியதை ஸங்க்ரஹிக்கின்றோம்.

"இந்த வித்யாசாலை ஸமஸ்க்ருத வித்யாபோஷணத்துக்கு ப்ரதான ஸ்தலமாயிருந்து ப்ராசீனமாய் நமது தாயதனமாயிருக்கும் ஜோதிமயமான மஹா நிதி இந்த ராஜ்யத்திலும் வெளி தேசங்களிலும் எங்கும் பரவி ப்ரகாசித்து வந்திருக்கிறது. இந்திய நாகரீகத்துக்கு அஸ்திவாரமான ஸம்ப்ராதயங்களையும் ஸ்வரூப விசேஷங்களையும் காப்பாற்றி நம்பினோர்களுக்குக் கொடுக்க இக்கலாலயம் ஸாதனமாயிற்று. எனவே இதன் பிரவ்ருத்திகள் தேசீய கைங்கர்யத்தில் ஸர்வோத் க்ருஷ்டங்களாக நின்றன. இப்படிச் சொல்லுவது அதிகமாகாது என்பது ப்ரகாசமாயிருக்கிறது. ஏனென்றால், நமது ஸமூஹத்தைப்பற்றியதோ, தேசியமோ, அல்லது மத ஸம்பந்தமானதோ, எவ்வித ப்ரவ்ருத்திகளிலும் நாம் நமது புராதனக் கொள்கைகளை விட்டு விலகக்கூடாது; விலகவும் முடியாது; நமது வருங் காலத்தின் நன்மையும் ப்ராசீன சரித்திரத்தில் வேறான்றியதாகவே யிருக்கும்.

"மேலும், ஸமஸ்க்ருத வித்யையினால் உண்டாகும் பயிற்சியும் ஆத்மகுண ஸம்ருத்தியும், பூதஸௌஹார்த்த குண வ்ருத்தியும் இக்காலத்தவர் காணும், பழையவோ புதியவோ, இறந்ததோ இருப்பதோ ஆகிய எவ்வித வித்யையிலும் காணப்படா. கேவல லோக த்ருஷ்டியால் ஐஹிகங்களான சில ஆநுகூல்யங்களைமட்டும் மனதில் வைத்துக்கொண்டு ஸம்ஸ்க்ருத வித்யையை மதிப்பிடக்கூடாது. ஏனென்றால் எல்லா வித்யைகளுக்கும் விச்ரமஸ்தானமான ஆத்மாவை அறிவது மிகவும் அவசியம். இவ்வாத்ம வித்யை ஸம்ஸ்க்ருதக் கல்வி விளக்குகிற அளவில் வேறு எந்தக் கல்வியும் காட்டவில்லை. இந்த ஜ்ஞானம் என்பது வெறும் புத்தியின் பயிற்சி மாத்திரமல்ல, இதுதான் வித்யைகளுக்கெல்லாம் மேற்பட்ட வித்யை; பௌதிக ஸித்தாந்தங்களுக்கெல்லாம் மேல் நிற்கும் ஸித்தாந்தம். அதின் ஸர்வோத்க்ருஷ்டமான நிலை அது கொடுக்கும் நிரதிசய பலங்களினாலேயே ஸித்திக்கிறது. இந்திய தேசத்தின் ஸர்வ கலைகளுக்கும் சில்பங்களுக்கும் உத்பத்தி ஸ்தானமாயும் அபிவ்ருத்தி காரணமாயும் இருப்பதன்றோ இவ்வித்யை?



ஹிந்து தேசத்தின் வடமேற்கிலுள்ள மத்திய ஆசியா முதல் கிழக்கு ஸமுத்திரத்தில் பிரவாக உற்பத்தி ப்ரதேசங்களான த்வீபங்கள் வரையில் காணப்படும் ஆசிய கண்டத்தையென்று உலகுக்குப் பெருமையாகக் காட்டப்படும் சில்ப விசேஷங்களெல்லாம் ஸமஸ்க்ருத வித்யையின் ப்ரபாவத்தாலன்றோ? இதல்லவோ அவைகளைப் புநருத்தாரணம் செய்ய உதவுவது?

"இவையெல்லாம் நிற்க, வேறு வித்யைகளாலும் க்ரந்த கோடிகளாலும் ஸாதிக்க முடியாதபடிகளில் அத்யந்தம் விசதமாயும் பலமாயும் இவ்வித்யை உபதேசிக்கும் பரமார்த்த ஸத்ய மொன்றுண்டு. அதுதான்பர ப்ருஹ்மத்தினிடத்தில் பெறவேண்டிய ப்ரும்ம நிர்வாணமென்னும் சாந்தி. ஆதாவது ஆத்மாவும் ப்ரபஞ்சமும் அந்தப் பரம ஸத்யத்தோடு ஒன்றுபட்டிருக்கும் நிலையை யறிந்து அனுபவிக்கும் பிரகாரம். அன்றியும் கேவல பௌதிக வித்யா ப்ரயுக்தமான மோஹ வலையிலகப்பட்டு உலகத்துக்கே அபாயத்தை விளைவிக்கும் பயங்கரமான பரவ்ருத்திகளில் அவசரமாய் உழலும் இக்காலத்தவர் நோய்க்கு இதைப்போன்ற மஹா சக்திபுடைய ஸித்த ஔஷதம் வேறு கிடையாது. இத்தகைய மோஹத்தைப் போக்கி மனிதனைக் கரைபெறச் செய்யவேண்டியது இக்காலத்துக்குரிய ப்ரதானமான கர்த்தவ்யம். அனுதி யெனப்பட்ட ப்ரஜா ஸ்வாதந்திரியத்தை நிலைநிறுத்த இதுவே கடைசியான உபாயமாவதுமன்றி, லோகோத்தாரண மார்க்கங்களைச் சீர்ப்படுத்தி எங்கும் ஸமாதானத்தை ஸ்திரமாக்கி சக்தியையும் புத்தியையும் வீணாக்காமல் பயன்படும் துறைகளை உத்தேசித்து சேமிக்கவும் இது மிக்க உதவும். இப்படி உலகத்தைச் சிறைமீட்டு அபிவிருத்தியடையச் செய்ய ஸம்ஸ்க்ருத வித்யையும் அதன் ஸம்ஸ்கார பலமுமே விலையற்ற ஸாதநங்கள் என்பது திண்ணம்.

" * * * * "இம்மாதிரியான வித்யாலயத்தில் சிக்ஷைபெறும் பண்டிதர் இதை ச்ரேஷ்டமானபடியின் உத்தம ஸம்ஸ்காரத்துக்கு அருமையான மனோவ்ருத்திபையும் நடவடிக்கையையும் உடையவரானாலல்லது அவரை வித்வானென வொண்ணாது. இதுதான் இந்தியாவினுடையவும் ஸம்ஸ்க்ருத வித்யையினுடையவும் அஸாதாரணமான ஸ்வபாவ ஞானத்தைப் பெருகச்செய்து, நாடெங்கும் அவ்வெளிச்சத்தைப் பரப்பி, வித்யையும் ஸத்ய தர்மமும் உருவெடுத்தாப்போல் விளங்கி, ப்ராக்ருத ஸ்வபாவத்தை ஆத்மகுணத்தாலடக்கி, தம் மனோவ்ருத்தியையும் நடவடிக்கையையும் ராக த்வேஷாதிகளுக்கு அடிமையாகாமல் காத்து தர்ம மார்க்கத்தில் நிர்ப்பயமாக நடப்பது ப்ராமாண்யத்தின் ஸார பூதமான அம்சம். இப்படி வர்த்திபவர் தான் வித்வான் எனப்படுவர். ஈச்வராஜ்ஞையான இவ்வித க்ருத்யங்களில் தமக்கிருக்கும் வெறுப்பை அவர் எப்பொழுதும் ஞாபகம் வைக்கவேண்டும். அவர் நமது புராதன வித்யையின் யோக்யதைக்கு நிதர்சனமாக வேண்டியவரன்றோ! இவ்விதமாய்த் தம் ஸஹோதர பூதர்களான சேதனர்களின் உயர்ந்த ஆத்மோஜ்ஜீவனகரமான கைங்கர்யங்களை அவர் கவனித்தால் ப்ரஜா ஸமூஹமனைத்தையும் காத்தருளிக்கும் ஸர்வேச்வரன் அவரைக் கைவிடார். 'योगक्षेमं वहाम्यहम्' 'யோக க்ஷேமத்தை வஹிக்கிறேன்' என்ற சரண்யன் சக்தி மூல சாஸநமாக எழுதப்பட்டிருப்பதைக் காணேமோ?

"மேலும் வித்வானுக்கு அவர் வித்யையே ஸர்வ ச்ரேஷ்டமான தனம். அதற்கு ரக்ஷகர் அவரே. அது அவருக்கு ஸர்வஜ்ஞனுல் அநுக்ரஹ பூர்வகமாகக் கொடுக்கப்பட்டது. ஒருவராலும் அபஹரிக்க முடியாது. ஆதலால் பிறர்க்கில்லாமல் தமக்கே அஸாதாரணமாயிருக்கும் இந்த உரிமையை அவர் எப்போதும் நினைத்து ஸந்தோஷித்து வாழட்டும்."

ப்ராம்மண த்வேஷமும் ஸம்ஸ்க்ருத த்வேஷமும் முற்றி நாடெங்கும் 'ஜமதீ ஜ்ரும்ஹமாணம் ஸமயம்' என்கிற கணக்கில் கலவரமாயிருந்தும் இக்காலத்தில் மைசூர் மஹாராஜா அவர்களின் அந்தரங்க ப்ரேமையைக் காட்டும் இப்பேச்சுக்கள் ஸாத்விகர்களுக்கு மிகவும் ஆச்வாஸகரமாயிருக்குமென்னத் தட்டில்லை. ப்ராசீன வித்யா பலமான ஆத்மகுண ஸம்பத்தைப்பற்றி யவர் கூறியவைகளை நமது பண்டிதர்கள் ஹார்த்தமாய் ஆமோதிப்பார்கள் என்பதும் நமது துணிவு.

---

## (2)

## மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத பாடசாலை.

சென்ற அக்டோபர்மீ 31௳ திநம் மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் வார்ஷிக மஹோத்ஸவம் நடைபெற்றது. சிரோமணி பரீக்ஷையிலும் இதர வித்வத் பரீக்ஷைகளிலும் கௌரவத்துடன் நிஷ்பர்நரானவர்களுக்குப் பதக்கம் முதலான பஹுமானங்கள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது அக்ராஸநம் வஹித்த ம-ா-ா-ஸ்ரீ. ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் மஹிமையைப்பற்றியும் நமது தர்மங்கள் ஆசாரங்கள் இவைகளைப்பற்றியும் ச்லாகித்து உபந்யஸித்தார். அதன் ஸங்க்ரஹம் இவ்விடத்தில் எழுதப்படுகின்றது.

"மிகச் சிறந்ததாயுள்ள நம்முடைய ஸம்ஸ்க்ருத பாஷையும் ருஷிகளால் விதிக்கப்பட்டிருக்கும் நமது ஆசாரங்களும் அழிந்துபோகாமல் மேன்மேலும் அபிவ்ருத்தமாகி வரும்பொருட்டு நாம் எல்லோரும் தகுந்த முயற்சியைச் செய்யவேண்டும். இவை அபிவ்ருத்தமாகி எங்கும் பரவினுல் ஜகத்திற்கே மிக்க ச்ரேயஸ் உண்டாகும். இதர தேசங்களிலும் சிற்சில ஸத்குணங்கள் வ்ருத்தியாகி வருகின்றன. இங்கிலாந்துதேசத்தில் முக்கியமாக விடாமுயற்சியும் காம்பீர்யம் தைர்யம் நம்பிக்கை முதலிய மற்றை நற்குணங்களும் ஏராளமாக வளர்ந்து வருவதை எல்லாரும் பார்க்கலாம். எவ்வளவு தடங்கல் வந்தாலும், தம்மால் ஆரம்பிக்கப்பட்ட காரியங்களை, தடங்கல்களை லக்ஷ்யம் பண்ணாமலே அவர்கள் மிக்க தைர்யத்துடன் நடத்திமுடிக்கிறார்கள். அது ஒரு உத்தம குணமே.

நம்முடைய நாகரீகத்தையும் நமது பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களையும் நாம் ஊன்றிப்பார்த்தால் அவைகளில் ஒரு விசேஷம் தென்படுகிறது. ஆத்மவிஷயமான விசாரத்திற்கே ஏற்றம் கொடுக்கப்பட்டு அது தவிர்த்த லௌகிக விஷயங்களைப்பற்றிய விசாரங்கள் அநாதரிக்கப்பட்டிருக்கின்றன என்பது அவைகளிலிருந்து ப்ரகாசமாகும். ஆத்மாவைச் சேர்ந்ததே நித்யம்; மற்றவை அநித்யங்கள்; லோகத்தில் காணப்படும் வெற்றி தோல்வி இவையெல்லாம் முக்கியமல்ல. சோக மோஹங்களைவிட்டு, சமம் தமம் பயமின்மை நித்யமான விஷயத்தில் பூர்ண நம்பிக்கை இவைகளையே முக்கியமாய் வைத்துக்கொண்டு நடப்பதே உண்மையாகச் சிறந்த மார்க்கம். 'ஆநந்த ஸ்வரூப ஸாக்ஷாத்காரமே மேலானது, அதை அடைய மற்ற விஷயங்களெல்லாம் அங்கங்களும் படிகளுமாக நிற்கின்றன' என்ற பூர்ண நம்பிக்கையும் அதற்கு வேண்டியபடி ஆசாரமும நாகரீகமும் இருத்தல்வேண்டும். அதுவே மேலான நோக்கமாகும். அது நமக்குமாத்திரமல்லாமல் பிறருக்கும் மிக்க நன்மையைச் செய்யக்கூடும். இத்யாதியான பர்யாலோசனைகளை தீர்க்கமாகச்செய்தே, ம-ா-ா-ஸ்ரீ. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் இந்த ஸம்ஸ்க்ருத காலேஜை ஏற்படுத்தினர் என்று நான் நினைக்கிறேன். அவர் ஜநங்களுக்கு கணக்கற்ற நன்மைகளைச்செய்திருக்கிறார். அவைகளுள் இந்த நன்மையே மிகச்சிறந்தது. அவருக்கு நாம் எல்லோரும் உபகார ஸ்ம்ருதியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்."



அந்த ஸமயத்தில் ஸந்நிஹிதராயிருந்த அநேகம் கனவான்களுக்குள் ஒருவரான கவர்ன்மென்டு சட்ட டிபார்ட்மென்டு ஸெக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ. ஸி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் முடிந்த பிறகு பின்வருமாறு ஒரு வார்த்தை சொன்னர்:—

"ஸம்ஸ்க்ருத பாஷை கேவலம் ஆத்மாவைப்பற்றிய ஸித்தாந்தங்களை மாத்திரம் விசதப்படுத்துகின்றது என்பது இல்லை. காவ்யம், நாடகம், அலங்காரம், தர்க்கம் வ்யாகரணம், மீமாம்ஸை முதலிய ஸாமாந்ய சாஸ்த்ரங்களும் ஏராளமாக வ்ருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளைப்படித்து அவைகளின் உண்மையை அறிவதும் வித்யார்த்திகளுக்கு அவசியம். அதனுல் நமது நாகரீகம் ஸ்திரப்படுத்தப்படும்."

அன்றைய தினமே அந்தக் காலேஜில் 8-மணிமுதல் 10-மணி வரையில் மஹாமஹோபாத்யாயர் திருப்பதி ஸ்ரீ. உ. வே. தேசிகாசார்ய ஸ்வாமி அவைதிக மதங்களைப்பற்றி உபந்யாஸம் செய்தார். ஸாங்க்ய யோக பௌத்த ஜைந மதங்கள் விஷயமாய் ப்ரஹ்ம ஸூத்ரக்காரர் அருளிச்செய்திருக்கும் ஆக்ஷேபங்களை விசதமாயும் தெளிவாயும் எல்லாருக்கும் தெரியும்படியும் விவரித்தார். உபந்யாஸம் முடிந்த பிறகு அக்ராஸநாதிபதியாக இருந்த மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ வெங்கட ஸுப்பா சாஸ்த்ரிகள், ஸ்ரீ தேசிகாசார்யர் சொன்னதையெல்லாம் ச்லாகித்துப்பேசி முடித்தார்.

---

## (3)

## வேதாந்த உபந்யாஸங்கள்.

சென்ற இரண்டு மூன்று மாஸங்களாக மஹாமஹோபாத்யாயர் திருப்பதி ஸ்ரீ. உ. வே. தேசிகாசார்ய ஸ்வாமி மயிலாப்பூரில் அரிய வேதாந்த உபந்யாஸங்களைச் செய்து வரு

கிறார். அநேக வைதிக பண்டிதர்களும் லௌகிக வித்வான்களும் அந்த உபந்யாஸங்களைத் தவறாமற்கேட்டு ஆநந்தித்து வருகிறார்களென்றும் நாம் கேள்விப்படுகின்றோம். சற்றேறக்குறைய இருபது உபந்யாஸங்கள் நடந்தனவாம். இன்னும் பல உபந்யாஸங்கள் இனியும் நடைபெறு மென்று தெரியவருகின்றது. கலியின் கொடுமையினால் வருந்தி கேவலம் த்ரிவர்க்க பரர்களாய் ஜநங்கள் பறக்கும் காலத்தில் மோக்ஷதர்மத்தையும் மோக்ஷமார்க்கத்தையும் அந்த ஜநங்களுக்கு உபதேசிக்கும்படியான இம்மாதிரி ஒரு ஸம்பவத்தை பகவான் அநுக்ரஹித்தது ஆச்சர்யமே. நம்மால் அறியப்படாத ஸுக்ருத விசேஷங்கள் நாம் எதிர்பாராமல் இருக்கும் காலத்தில் தாமே இம்மாதிரி பலிக்கின்றன.

(4)

## சோசிக்கத்தகுந்த ஸம்பவங்கள்.

பலகாலம் ராமநாதபுரம் கொச்சி முதலிய ஸம்ஸ்தானங்களில் ஆஸ்தாந வித்வானாக இருந்து, ஸமீபகாலத்திற் சிலவருஷங்களாக மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் வேதாந்த ப்ரவசந அதிகாரத்தை வஹித்து வந்த மஹாமஹோபாத்தியாயர் பஞ்சாபகேச சாஸ்திரிகள் பரலோகத்தைச் சேர்ந்துவிட்டார் என்று கேட்க நாம் மிக வ்யஸநிக்கின்றோம்.

திருக்குடந்தையில் ஐயங்கார் தெருவில் பஹுகாலமாக மிக்கக் கர்மடராகவும் அபாரமான வைதுஷ்யம் பொருந்தினவராகவும் மஹாயஜ்ஞங்களுள் பலவற்றைச் செய்தவராகவும் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கே பெரியதொரு அலங்காரமாகவும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. வே. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர் ஸ்வாமீ சென்ற மாஸத்தில் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார். அவர் புராண ப்ரவசநம் செய்து நாம் பலதடவைக் கேட்டிருக்கிறோம். அவருடைய வாக்மித்வமும் விஷயங்களைத் தெளிய உபதேசிக்கும் தன்மையும் அந்யாத்ருசங்களே. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபை வார்ஷிக மஹோத்ஸவங்களில் பலமுறை அவர் நேர்த்தியான உபந்யாஸங்களைச்செய்து நமக்குப் பலவிதங்களான உபகாரங்களைச் செய்திருக்கிறார். அப்படிப்பட்ட அபூர்வ வ்யக்தியை நாம் இழந்து விட்டதுபற்றி நாம் மிகவும் சோகிக்கிறோம்.

ஸ்ரீமான் பாலமுகுந்ததாஸ்ஜீ என்னும் ஒரு உத்தர தேசத்திய ஸ்ரீ வைஷ்ணவர் புஷ்கரத்தில் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன் ஆசார்யன் திருவடிகளை அடைந்தார் என்னும் ஸமாசாரத்தைத் தெரிவிக்க நாம் சோகிக்கிறோம். அவர் உத்தர தேசங்களில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிக ஸித்தாந்தத்தை பரவச்செய்வதில் விசேஷித்த ச்ரத்தையை உடைத்தானவராக இருந்தார். ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்மன் க்ருபைக்குப் பாத்ரமானவர். ஸ்வல்பகாலம்முன் ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்யமங்கள விக்ரஹம் ஒன்றை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு உத்தர தேசத்தில் ப்ரதிஷ்டை செய்து ஸம்ப்ரதாய ப்ரவசநத்திற்காக அவர் மிக்க பரிச்ரமத்தை வஹித்து வந்தார். அப்படிப்பட்ட பகவத்கடாக்ஷம் பெற்றிருந்த ஒருவர் இந்த விபூதியை விட்டு மறைந்தது நமக்கு ஒரு பெரிய நஷ்டமே.

---

ஸ்ரீ:

## கடிதங்கள்.

ஸ்ரீ. வே. தீபிகை பத்ராதிபருக்கு,—

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் மாஜி கார்யதர்சி பத்ராதிபர் ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் தீபிகாபிமானிகளுக்கு ஓர் விஜ்ஞாபநத்தைச் சென்ற மாஸத்திய தீபிகையில் வெளியிட்டிருந்ததை அடியேன் பார்த்தேன். உண்மைக்கு மாறாகவும் விபரீத அபிப்ராயம் ஏற்படக்கூடிய வழியிலும் சில விஷயங்களை அவர் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறபடியால், தீபிகாபிமானிகள் உண்மையை அறியவேண்டியும் ஸபையின் நன்மையை உத்தேசித்தும் அதற்கு பதில் எழுதவேண்டுவது அவசியமாகின்றது.

1. "தாம் இரவும் பகலுமாக ச்ரமப்பட்டு நடத்திவந்ததால் 800 மெம்பர்கள் இருந்தது 770 ஆக ஆகியும் அந்திம தசையைப்போல் ப்ரபுக்களுடைய ஔதார்யத்தை எதிர்பார்த்த தீபிகைக்கு இப்போது மூலதநமாக ரூ. 1250 சேர்த்து வைத்திருப்பது தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்த விஷயம்" என்று அவர் எழுதியிருக்கிறார். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ராஜிநாமா செய்த தேதியில் 477 அங்கத்தினர்களே இருந்திருப்பதாக அவர் வைத்திருந்த ஆபீஸ் ரிஜிஸ்தரிலிருந்து ஏற்படுகிறது. அப்படியிருக்க 770 என்று எதை ஆதாரமாகக்கொண்டு இவர் எழுதியிருக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. ரூ. 1250 தாம் மூலதனமாகச்சேர்த்து வைத்திருப்பதாகக் கூறுவதும் உண்மையன்று. இவருக்குப்பூர்வம் இந்த ஸபையின் கார்யதர்சியாக இருந்தவரால் இவர் அதிகாரம் வஹிக்கும் காலத்தில் இவரிடம் ரூ. 850 ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மூலதநமாக இவரிடம் கொடுக்கப்பட்டதன்றோ ?

2. இவர் நான்கு வருஷகாலமாகத் தாம் பத்ராதிபராக இருந்து வந்ததுபோல கூறுகிறார். 1924-ம் வருஷம் அக்டோபர் மாஸம் வரையில் ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் பத்ராதிபராக இருந்துவந்தார். அதற்குப் பிறகுதான் இவர் அந்த அதிகாரத்தை வஹித்தது. ஆகையால் சென்ற இரண்டு வருஷகாலமாகத்தான் இவர் பத்ராதிபராக இருந்தார்.

3. அந்த விஜ்ஞாபநத்தின் இரண்டாவது பாராவில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றது. தாம் "நல்ல கார்யங்களில் ப்ரவ்ருத்தித்ததாகவும் கமிடியில் சிலர் அவ்விதம் தம்மைச்செய்யவொட்டாமல் தடுத்து வந்தார்களென்றும் தீபிகையை நடத்த வேண்டியதற்கு எவ்வளவு பாதகமுண்டுபண்ணலாமோ அவ்வளவு பாதகங்களையும் உண்டாக்கி வந்ததாகவும்", ஆகவே தாம் ராஜிநாமாச் செய்ததாகவும் அவர் சொல்லியிருக்கிறார். இது சரியன்று. இதன் உண்மையைச் சொல்லும்பொருட்டு கமிடியில் நடந்ததை நான் வெளியிடவேண்டியது அவசியமாகின்றது.

முந்திய வருஷத்தில் நிர்வாஹக கமிடியில் ஸ்ரீ. உப. ராவ்ஸாஹிப் டி. ராமாநுஜய்யங்கார் ஒரு அங்கத்தினராக இருந்துவந்தார். அவருடைய பெயர் கமிடியிலிருந்து அதற்குப்பிறகு எடுபட்டிருந்தது. அப்படி அந்தப் பெயரை எடுக்க அவருடைய ஸம்மதியாவது கமிடியின் அநுமதியாவது அடையப்பட்டதாகவும் தெரியவில்லை. மற்றொரு கார்யதர்சியாக இருக்கும் ஸ்ரீ. உப. கோபாலஸ்வாமி ஐயங்காருக்கும் இது தெரியாது. இது விஷயமாகச்சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் நடைபெற்ற கமிடிக்கூட்டத்தில் நாங்கள் விசாரித்து, அது ஸ்ரீ. ஸ்ரீநிவாஸராகவய்யங்காரால் புத்திபூர்வமாகச் செய்யப்பட்டது என்று தெரிந்துகொண்டு அதைக்கண்டிக்கும் பொருட்டு நானும் இன்

னும் சில கமிடிமெம்பர்களுமாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தோம். ஆனல், அத்யக்ஷரின் நியமனத்தின் பேரில், ஒருவிதமாக மாற்றப்பட்டு கமிடியில் பெரும்பாலோரால் ஆமோதிக்கப்பட்டது. இப்படிச்செய்ததில் என்ன வ்யதிக்ரமம் என்று எனக்குத் தெரியவில்லை.

4. தீபிகையிற் சிலகாலமாக பாகவதாபசாரத்திற்கு ஹேதுவாகும்படி சில வித்வான்களைத் தூஷித்து எழுதப்பட்டுவந்தது தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்த விஷயம். அப்படிச் செய்வது ந்யாயமன்று என்றும் எல்லாவித்வான்களையும் நாம் புரஸ்கரித்துப்போவதே நமது தீபிகையின் கொள்கையானதால் சில வித்வான்களை திக்கரிப்பது கொள்கைக்கு விரோதமென்றும் உணர்ந்து, நான் தீபிகையின் கொள்கையை த்ருப்திகரமாக மாற்றவேண்டுமென்னும் கருத்துடன் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் மீது ஒரு கண்டனத்தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். கமிடியில் அந்தத்தீர்மானத்தை ஆறு அங்கத்தினர் அநுமோதித்தும், ஆறு அங்கத்தினர்கள் அநுமோதிக்காததால் ஸபாத்யக்ஷரின் அபிப்ராயத்தை அநுஸரித்து அந்தத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. இம்மாதிரியான தீர்மானங்கள் எந்தக்கூட்டத்திலும் ப்ராயேண நிறைவேறுவது ச்ரமம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். உண்மையை உணர்ந்தாலும் கடுமையை ஆமோதிக்காமல் சிலர் இம்மாதிரியான தீர்மானங்களை அநாதரிக்கிறார்களன்றோ?

5. ஸபையின் வரவுசெலவு கணக்கை இந்த ஸ்ரீ. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் சிற்சில கூட்டங்களில் மாத்திரம் வெளியிடுவது வழக்கம். அப்படி வெளியிடும் பொழுதும் அதை ஸ்தூலமாக மாத்திரம் சொல்லுவர். அதைப்பற்றிய ஸூக்ஷ்ம அம்சங்களை நாங்கள் அடிக்கடி கேட்பது உண்டு. கேட்டும் அவர் அவைகளை வெளியிடாமலே இருந்துவிடுவர். அதில் கோபமும் கொள்வர். ஏதாவது தீர்மானம் எழுதி அனுப்பினல் அதைக் கூட்டகாலங்களில் ஆஜர் செய்வதுமில்லை. மாஸம் ஒருமுறை கூட்டம் கூட்டவேண்டும் என்னும் நியமம் இருக்கையிலும் அம்மாதிரி செய்யாமல் இவர் இஷ்டப்படி கூட்டத்தை சேர்ப்பிப்பது உண்டு. இவையெல்லாம் ஒழுங்குக்கு விரோதமாகையால், நானும் இன்னும் சிலரும் இவைகளைப் பலதடவைகளில் ஆக்ஷேபிக்கவேண்டியதாயிற்று. இப்படி ஆக்ஷேபிப்பது ஸ்ரீவைஷ்ணவ தர்மத்திற்குத் தகாததாகுமோ?

6. இந்த வித்வான்தான் கூடும் இந்த வித்வான்கூடாது என்று நாங்கள் ஒருபொழுதும் சொன்னதேயில்லை. அப்படிச்சொன்னதாக எழுதியிருப்பது கேவலம் மித்யை. எங்களுக்கு ஒருவரையும் வருத்தப்படுத்தவேண்டும் என்னும் எண்ணமே இல்லை. ஸபையை அபிவ்ருத்திக்குக் கொண்டுவரவேண்டும் என்னும் எண்ணமே எங்களை இம்மாதிரியான வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திப்பித்தது.

ஆகையால் தீபிகாபிமாநிகள், ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவய்யங்காருடைய விஜ்ஞாபநத்தால் விபரீத எண்ணம் கொள்ளாமல் தீபிகையை முன்போல ஆதரித்து வரவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

திருவல்லிக்கேணி.
3-11-1926.

சே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யன்,
நிர்வாஹ கமிடி அங்கத்தினரில் ஒருவன்.

ஸ்ரீ꞉.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம꞉.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

யோऽந்த꞉ ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர꞉ ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஒரு விஜ்ஞாபநம்.

ஸ்ரீசரண்யனுடைய ஸங்கல்பத்தால் இந்த ஸ்ரீவேதாந்த தீபிகையை நடத்தும் கைங்கர்யமானது இப்பொழுது அடியேனுக்கு ப்ராப்தமாகி இருக்கின்றது. அதை எவ்வித குறைவுமின்றிக்கு நடத்துவதற்கு அபேக்ஷிதங்களான ஜ்ஞாநம் சக்தி முதலிய குணங்கள் அடியேனிடம் இல்லையாதலால், அவைகளை அந்த பகவானே பூர்ணமாகக் கொடுத்து, தனது கைங்கர்யமான இந்தக் கார்யத்தைத்தானே த்ருப்திகரமாக நடத்திக்கொள்ள வேணுமென்று ஹார்த்தமாக ப்ரார்த்திக்கின்றேன்.

இவ்விஷயத்தில் அடியேனுக்கு முக்கியமான பயஹேது ஒன்று உண்டு அதாவது - பஹுவாகவும் ஸத்யம் தவறாமலும் வ்யாஹரிக்க வேண்டியது அவசியமானதால், புத்தி பூர்வகமாகவோ அபுத்தி பூர்வகமாகவோ எப்பொழுதாவது அப்ரியத்தைச் சொல்லும்படிக்கும் அது வழியாக பாகவதாபசாரத்திற்குப் பாத்திரமாகும்படிக்கும் ஸம்பவித்து விடுமோ என்பதுதான். அவ்விதம் ஒரு அபசாரமும் நேராமல் நடந்துகொள்வதற்கு அடியேன் யதாசக்தி ப்ரயத்நப்படுகின்றேன். ஒருகால் ப்ரமாதத்தினலாவது நிர்பந்தத்தினலாவது ஏதாவது ஸ்காலித்யம் நேர்ந்துவிட்டால், அதை ஸ்ரீபாகவதர்கள் தமக்கு நைஸர்க்கிகமான க்ஷமையுடன் பொருத்துப்போக வேணுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கின்றேன்.

இந்தக் கைங்கர்யம் இதற்கு முன் ஒரு காலத்தில் அடியேனுக்குக் கிடைத்திருந்தது. ஆனல், தேஹ அஸ்வாஸ்த்யம் முதலிய சில காரணங்களால் அதை ஸ்வல்ப காலத்திற்குப் பிறகு பரித்யஜித்தேன். இப்பொழுது ஸ்ரீசரண்யன் மறுபடியும் அதை ஸங்கல்பித்திருக்கிறான். த்ருப்தியுடன் அதை அடியேன் அங்கீகரிக்க வேண்டியவனாக இருக்கையிலும் ஒரு

காரணத்தால் மநஸ்ஸில் ஸ்வல்ப க்லேசத்தை அடைகின்றேன். அதாவது - இந்தத் தீபிகையைச் சென்ற இரண்டு மூன்று வருஷகாலமாக நடத்திவந்த ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமீ கொஞ்சம் வைமநஸ்யத்துடன் இதை விட்டு விலகினார் என்பதே. அது விஷயத்தில் அடியேன் செய்யக்கூடியது ஒன்றுமில்லை யாயினும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மனம் நொந்து ஒரு கார்யத்தைப் பரித்யஜிக்க, அதில் அடியேன் அந்வயிக்கும்படி ஸம்பவிக்கின்றதே என்பது வ்யஸநாகரமாகவே இருக்கின்றது. ஸ்ரீபகவான் எல்லாவற்றையும் ஸ்மீகரணம்செய்து ஒருவருக்கும் எவ்வித ஆயாஸமும் ஜநிக்காமல் இருக்கும்படி எல்லாரையும் கடாக்ஷித்தருள வேணும்.

* * * * * *

**தர்மசோத்துக்களின் பரிபாலநம்.**

நமது ஹிந்து மத ஸம்பத்தங்களான தர்ம சொத்துக்களின் பரிபாலந விஷயமாய் ராஜாங்கத்தில் இரண்டு மூன்று வருஷ காலமாக ஒருசட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அநேகமாக எல்லா ஜநங்களுக்கும் தெரிந்த விஷயமே. அந்தச் சட்டத்தில் ஏதோ சில குறைவுகள் இருக்கின்றன வென்பதை உத்தேசித்து, சென்ற ஸெப்டம்பர் அக்டோபர் மாஸங்களில் நடைபெற்ற சட்டநிரூபண ஸபையில் அதைப்பற்றி ப்ரஸ்தாபித்து, அந்தக் குறைவுகள் நீங்கும்படி சட்டநிரூபண ஸபையார் சில திருத்தங்களைச் செய்தார்கள். அவை ராஜப்ரதிநிதியின் அநுமதிக்காக மேல் அதிகாரிகளிடம் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த அநுமதி கிடைத்தவுடன் அது நடவடிக்கைக்குக் கொண்டுவரப்படும்.

சட்ட நிரூபண சபையில் இது ஆலோசிக்கப்பட்டபொழுது, பல ஸப்யர்களால் இதன் அநேக அம்சங்கள் ஆக்ஷேபிக்கப்பட்டன. ஆனால், அந்த ஆக்ஷேபங்களில் ஒன்றுகூட ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்படவில்லை.

இந்தச்சட்டத்தில் உண்மையாகவே பல விஷயங்கள் ஆக்ஷேபிக்கத் தகுந்தவைகளாக இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானவற்றைச்சற்று கவனிப்போம். முதலில்:— மத விஷயங்களில் ராஜாங்கத்தார் ப்ரவேசிப்பது, ஏற்கெனவே அவர்கள் செய்திருக்கும் ப்ரதிஜ்ஞைக்கும், இதுவரையில் அவர்கள் அநுஷ்டித்துவந்துள்ள ந்யாயத்திற்கும் விருத்தம். ராஜாங்கத்தார் ஹிந்து சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டவர் அல்லராதலால் அவர் அதில் ப்ரவேசிக்காமல் இருப்பதே தர்ம்யமாகும். ஜநங்களின் பூஜைக்கு அர்ஹங்களாகவும் தைவ ஸாந்நித்யம் பெற்றனவாகவும் இருக்கும் இடங்களில் அவைதிகரும் நாஸ்திக ப்ராயரும் மதாந்தஸ்தர்களும் அதிகாரிகளாக வந்து



அதிகாரம் செலுத்த ஆரம்பிப்பதை யாராவது தர்ம்யமென்றாவது ந்யாய்யமென்றாவது உசிதமென்றாவது அங்கீகரிப்பார்களோ?

இரண்டாவது:— இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள அநேக விஷயங்களுள், பின்வருமாறு ஒன்று காணப்படுகின்றது. ஒரு தர்மசொத்தில் அந்தத் தர்மத்திற்குக்கண்டு த்ரவ்யம் அவசிஷ்டமாக இருந்தால் அப்படி அவசிஷ்டமாயிருக்கும் த்ரவ்யத்தை ராஜாங்கத்தார் தமக்கு உசிதமாகத்தோன்றும் விஷயாந்தரங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளலாமாம். இது ந்யாய்யமாகுமா? வேறு விஷயங்களில் உபயோகப்படுத்தினால் அது அந்தத் தர்மத்தை ஏற்படுத்தினவரின் இஷ்டத்திற்கு விருத்தமாகாதா? அப்படி இஷ்டவிரோதம் செய்வது த்ரோஹமாகுமே. தவிரவும், வேறு ஸத் விஷயங்களிலேயே அந்த த்ரவ்யத்தை விநியோகிப்பார்களென்றும், ஏற்கெனவே எதற்காக அந்தத்தர்மம் ஏற்படுத்தப்பட்டதோ அதற்கு இம்மாதிரியான வேறு விநியோகம் விருத்தமாக இருக்காது என்றும் யார் உறுதியாகச் சொல்லக்கூடும்?

மூன்றாவது:— இந்த விசாரணையைச் செய்வதற்காக அநேக சிப்பந்திகளையும் அதிகாரிகளையும் சம்பளம் கொடுத்து நியமித்திருக்கிறார்கள். அதனால் ஏற்படும் செலவு முழுவதும் தர்மசொத்துக்களின் பாரமாகவே ஏற்படுகின்றது. தர்மசொத்துக்களுக்கு அம்மாதிரி வ்யயம் உண்டுபண்ணுவது ந்யாயவிருத்தமே.

இன்னும் இம்மாதிரியான பல தோஷங்கள் இருக்கிறபடியால் நாமும் இந்தச்சட்டத்தை ஸாதுவன்று என்று வெறுக்கிறோம்.

சிலவிடங்களில் நமது தர்ம சொத்துக்கள் தத்கால அதிகாரிகளால் துர்விநியோகப்படுத்தப்படுகின்றன என்பதும், தர்ம கர்த்தாக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு சிலர் தர்மசொத்துக்களை ஸ்வயம் ப்ரயோஜநப்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதும் உண்மையாக இருக்கலாம். அதை விட இது எப்படி அதிக ஆக்ஷேபத்திற்கு இடமாகும் என்று ஒரு ப்ரச்நம் பிறக்கலாம் எவ்வித துர்விநியோகமும் எவர்களாலும் ஒருபொழுதும் நேராமல் நாம் ஒரு மார்க்கத்தைத் தேடக்கூடாதா என்பதுதான் நமது ப்ரதிப்ரச்நம்.

தத்காலத்தில் ஸ்ரீஅஹோபிலம் ஸந்நிதி ஸம்பந்தப்பட்டவரையில் சில அம்சங்களில் இந்தச் சட்டம் அநுஷ்டாநத்திற்கு வராமல் இருக்கும்படி ராஜாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று கேட்டு நாம் ஸ்வல்ப ஆச்வாஸம் அடைகின்றோம். ஆனால், ‘ [illegible]

ம்' என்று கம்ஸன் சொன்னபொழுது '[illegible]' என்று சுகமஹர்ஷி சொல்லியிருப்பது இது ஸம்பந்தமாக நம்முடைய ஞாபகத்திற்கு வருகின்றது.

*    *    *    *    *

**ப்ராணி ஹிம்ஸை**

அஹிம்ஸையைப் பரமமான தர்மமாகக்கொண்டாடி வரும் மஹாத்மா காந்தி என்பவர், ஸ்வல்ப தினங்களுக்கு முன், 'நகரங்களில் ஜனங்களின் நிர்பயமான ஸஞ்சாரத்திற்கு உபரோதமாய் வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் நாய்களை ராஜாதிகாரிகள் கொல்விப்பது பாபமாகாது' என்று தமது அபிப்ராயத்தைப்பத்ரிகை வழியாக வெளியிட்டிருக்கிறார். இது சாஸ்த்ர ஸம்மதமென்றென்றும் அவர் இம்மாதிரி அபிப்ராயம் கொடுப்பது அவருடைய கொள்கைக்கு விருத்தமென்றும் பலர் அவரைக் கண்டிக்கிறார்கள். இதன் உண்மையைச் சற்று விசாரிப்போம்.

எவ்வித ப்ராணிக்கும் ஒருவித ஹிம்ஸையையும் நாம் செய்யக்கூடாது என்று நமது ஸ்ம்ருதிகள் சொல்வது உண்மையே. அஸத்ய வசநம் பாபமாவதுபோல ப்ராணி ஹிம்ஸையும் பாபமேயாகும். ஆனால், இம்மாதிரியான சாஸ்த்ர விதிகளெல்லாம் அதிகாரி பேதங்களை அநுஸரித்தும் காலம் தேசம் இவைகளை அநுஸரித்தும் மாறுதல் அடைவது உண்டு. உத்தம அதிகாரிகளாய் ஜகத்தின் தத்வத்தை நன்றாக உணர்ந்து பகவானிடத்தில் த்ருடமான பக்தியுடனும் விச்வாஸத்துடனும் வர்த்தித்துவரும் தீரர்கள் ஒரு காலத்திலும் ஒரு தேசத்திலும் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டுள்ள மார்க்கத்தைவிட்டு அணுமாத்ரமேனும் விலகாமலே நடந்துவருவார்கள். ஹரிச்சந்த்ரன் உத்தம அதிகாரியைச் சேர்ந்தவன். ஜந ஸாமாந்யம் அப்படிப்பட்டது அன்று. ஆபத் வரும்போல இருக்கும் காலங்களில் ஸாமாந்ய ஜநங்கள் ஆத்ம ஸம்ரக்ஷணத்தை உத்தேசித்து அஸத்யத்தில் ப்ரவ்ருத்திப்பதை நாம் பார்க்கிறோம். ஸீதாதேவியுடன் ஹநுமான் பேசிவிட்டுப் பிறகு அசோகவநத்தை அழிக்க ஆரம்பித்த பொழுது, ராக்ஷஸிகள் அவரிடமிருந்து பயந்து ஸீதாதேவியிடம் போய் 'யார் இவர்?' என்று கேட்டதற்கு

"அஹிரேவ ஹ்யஹே: பாதாந் விஜாநாதி ந ஸம்ஶய:"

(பாம்பின்கால் பாம்புக்கே தெரியும் நீங்களே அவரை அறிவீர்கள்; நான் அறியேன்) என்று ஸீதாதேவி பதில் சொன்னதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்விதம் பிராட்டி அநுஷ்டித்தது 'ஸாமா



ந்ய ஜநங்களின் அநுஷ்டாநம் இவ்விதம் இருக்கும்; அவர்கள் விஷயத்தில் அம்மாதிரியான காலங்களில் அது பாபமாகாது' என்பதை ஸூசிப்பித்தபடி யன்றோ? அதுபோலவே, பகவான் ந்ருஸிம்ஹாவதாரம்செய்து ஹிரண்ய கசிபுவை ஸம்ஹரித்தவுடன், ப்ரஹ்லாதாழ்வான் பகவானை ஸ்துதிக்கும் அவஸரத்தில்,

"மோதேத ஸாதுரபி வ்ருஶ்சிக ஸர்பஹத்யா"

(ஸாதுக்களும் விஷஜந்துக்களின் வதத்தில் ஸந்தோஷமடைகிறார்கள்) என்று சொல்லியிருக்கிறார். இதுவும் ஸாமாந்ய ஜநங்கள் விஷயமென்றும் காலதேசங்களுக்கு அதீநமென்றும் நாம் அறியவேண்டும். யஜ்ஞங்களில் பசுமாரணம் வேறு விஷயமாக இருக்கையிலும், "யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோ'ஸ்மி" என்னும் ஸ்ரீபகவத்கீதாவாக்யத்தின் விவரண அவஸரத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன், 'ஜபயஜ்ஞஸ்ய ஹிம்ஸாதி ராஹித்யாத் ஸர்வயஜ்ஞேப்யோ ஜபயஜ்ஞ: ப்ரஶஸ்ய:' (ஜபயஜ்ஞத்திலோவென்றால், ப்ராணிஹிம்ஸைக்கு ப்ரஸங்கமில்லையாதலால், அது மற்றை யஜ்ஞங்களைக்காட்டிலும் ப்ரசஸ்தம்) என்று அநுக்ரஹித்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் ஆலோசித்துப்பார்த்தால் ப்ராணி ஹிம்ஸையை எச்சமயத்திலும் வர்ஜிப்பது உத்தமமென்றும், அவ்வளவு தைர்யமில்லாத ஸாமாந்ய ஜனங்கள் ஆத்ம ஸம்ரக்ஷணத்திற்கு எவ்வளவு அவச்யமோ அவ்வளவு ஹிம்ஸையில் ப்ரவ்ருத்திக்கலாமென்றும் ஏற்படுகின்றது. மஹாஜநங்களுடைய ஸம்ரக்ஷணம் ப்ராணி ஹிம்ஸாதீநமாக இருந்தால், அந்த ஸம்ரக்ஷணபாரத்தை வஹிக்கும் அதிகாரிகள் அந்த ஸம்ரக்ஷணத்திற்கு அவச்யமபேக்ஷிதமான ஹிம்ஸையைச் செய்யலாமென்றும் ஏற்படுகின்றது. இந்த எல்லையைமீறி ஹிம்ஸையில் ப்ரவ்ருத்தித்தால் அது பாபமேயாகும். ஸமஸ்த ஸர்ப்பங்களையும் நசிப்பிக்கவேண்டுமென்று ஜநமேஜயர் ஸர்ப்பயாகத்தில் ப்ரவ்ருத்தித்ததைப் பெரியோர்கள் கண்டித்திருக்கிறார்கள். மஹாத்மா காந்தி சொல்லியிருப்பது இவ்வளவாகவே இருக்கிறபடியால் அதில் சாஸ்த்ர விரோதம் இல்லையென்றே நாம்நினைக்கிறோம்.

ஸ்ரீ:.

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

### அக்ஷயஹு கார்த்திகைமீ.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1926 | நவம்பர்மீ | 16வ | கார்த்திகைமீ | 1வ | செ. த்வாதசி திதி, ஏகாதசி வ்ரதம். வ்ருச்சிக ரவி 2-35. ஸங்கரமணம். |
| ,, | ,, | 19வ | ,, | 4வ | வெ. கார்த்திகை தீபம். |
| ,, | ,, | 20வ | ,, | 5வ | ச. பாஞ்சராத்ராலய தீபம். |
| ,, | டிஸம்பர் | 1வ | ,, | 16வ | பு. ஏகாதசி வ்ரதம். |
| ,, | ,, | 4வ | ,, | 19வ | ச. அமாவாஸ்யை திதி. |
| ,, | ,, | 5வ | ,, | 20வ | ஞா. ப்ரதமாதிதி; அத்யயநோத்ஸவா. ரம்பம். |
| ,, | ,, | 15வ | ,, | 30வ | பு. ஏகாதசி; தநுரவி 32-59, ஸங்க்ரமணம். |

---

ஸ்ரீ:

ஸபையை நடத்துவதற்கு முக்கிய அதிகாரிகளாக இருக்குமவர்களுள் சில மாறுதல்கள் ஸம்பவித்ததால், ஸ்ரீவேதாந்த தீபிகையின் ஸஞ்சிகைகள் வெளிவருவதில் கொஞ்சம் விளம்பம் ஏற்பட்டது. இன்னும் 15 - தினங்களுக்குள்ளாக அடுத்த ஸஞ்சிகை வெளிவரும். அதற்குப் பிறகு யதாக்ரமம் ப்ரதிமாஸம் ஒரு ஸஞ்சிகை வீதம் ப்ரசுரம் செய்யப்படும். அநேக காரணங்களால் ஸ்ரீவேதாந்த ஸங்க்ரஹமும் இந்த மாஸம் விச்சிந்நமாக இருக்கிறது. அடுத்த மாஸம் முதல் அதுவும் யதாபூர்வம் வெளிவரும். ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி படமும் அடுத்த ஸஞ்சிகையுடன் அனுப்பப்படும்.

அக்ஷயஹு
கார்த்திகைமீ 1வ.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்,
ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்சி.

---

### புதிய க்ரந்தங்கள்.

மஹாமஹோபாத்யாயர் திருப்பதி ஸ்ரீ. உப. தேசிகாசார்ய ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்ட "வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம்" என்னும் க்ரந்தமும், பெருமாள் கோயில் ப்ரதிவாதிபயங்கரம் ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த "ஆசார்ய சர்யாம்ருதம்" என்னும் க்ரந்தமும் வரப்பெற்றோம். அவைகளைப்பற்றிய விஜ்ஞாபநம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

186765

# The All India Srivaishnava Conference

HYDERABAD (DECCAN)

It has been decided to hold the second session of the "All India Srivaishnava Conference" in Hyderabad (Dn.) on November 26, 27, and 28, 1926.

The Reception Committee invites essays from learned and enlightened authors to be read at the conference.

The best and most useful among them will be selected, and the authors will be awarded cash bonuses of Rs. 50 each, in addition to certificates of merit.

Each essay should cover at least 40 pages in all, and should reach the Secretary not later than 10 days prior to the holding of the conference.

## SUBJECTS.

1. "History of Dravida Veda"
2. "Srivaishnavite pundits"
3. "The Triumph of Sri Ramanuja, His teachings"
4. "How Srivaishnava Dharma was able to spread during the Islamic Reigns"
5. "The extent of the spread of Srivaishnava Dharma in Europe, America and other Western countries"
6. "The Shastric authority, if any, sanctioning Foreign Travel"
7. "Idolatory"
8. "The Visishtadwaita Philosophy"
9. "How to encourage fraternal feelings and social intercourse among Srivaishnavites."
10. "The best scheme for the establishment of Institutions for the teaching of the Visishtadwaita Philosophy"
11. "The philosophies, customs and literatures of other religions, following the Visishtadwaita Philosophy"
12. "Thapta-Mudra Dharan,"

SREERANGAM BHEEMACHARYA.
Tharkavachaspati Vidyabhushana,
Publication Secretary,
All India Srivaishnava Conference.

HYDERABAD, (DN.)
27-9-1926.

ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மதிராஸ்.

ஸபாத்யக்ஷர்:—ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஹைகோர்ட் ஜட்ஜ்.
கார்யதர்சி:—ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஹைகோர்ட் வக்கில்.
உதவி கார்யதர்சி:—ஸ்ரீ. உப. கே. டி. ஸுந்தரராஜாசார்யர்.
ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்:—ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

---

# THE VEDANTA DIPIKA

*A Tamil monthly Journal of Hindu Religion & Philosophy*

---

All literary communications, letters for publication etc. should be addressed to

S. Vasudevachariar B. A., L. T.,
Editor, Vedânta Dipika
Mambalam, Saidapet.

Money orders and cash remittances should be sent to

S. Gopalaswami Aiyangar B. A., B. L.,
High Court Vakil,
5. North Mada street,
Mylapore.

All other communications should be addressed to

K. T. Sundara Raja Chariar B. A., L. T.,
Assistant Secretary Sri V. S. Sabha,
10. Katchaleswarar Agraharam,
George Town, Madras.

**N. B.** Subscribers are requested to send their subscriptions to the Secretary at their earliest convenience. Intending advertisers are requested to apply to the Assistant Secretary for terms.

---

Published by the Secretary Sri Vaishnava Siddhanta Sabha, Madras.